REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 22 சதம் விலை அணா 3

மலர் 9 | 18—3—51 | இதழ் 38, 39.

★ உரிமைப் போர்—வெற்றிக் காட்சி! ★

"ஆரிய மாயை! ஆரிய மாயை!!" இதுபோலக் கூவினர்.

"ஆரிய மாயையாமே?"—கேட்ட வண்ணம் கூடினர், மக்கள். "கேளுங்கள் பெரியோர்களே" என்று அழைத்தவண்ணம், தங்கள் கைகளிலேயிருந்த புத்தக ஏடுகளைப் புரட்டினர். உரத்த குரலில் படித்தனர். 'இதுதான், ஆரிய மாயை' என்று முடித்தனர்.

கூடியிருந்த மக்களிடையிலே, கை தட்டல்! கரகோஷம்!! படித்தவர், அங்கிருந்து புறப்பட்டு நடக்கிறார்—கூடிய மக்களோ, கலையவில்லை; அவரோடேயே நடந்து செல்கின்றனர்! சிறிது தூரம் சென்றதும், படித்த தோழர் நிற்கிறார். "அன்புள்ள தோழர்களே!" என்று, தொடங்குகிறார். கூட்டம், அதிகமாகிறது "படி! அங்கு படித்தாயே, அதையே இன்னுமொரு முறை படித்துக் காட்டு!"—இதுபோல, மக்கள், வாய்விட்டுக் கேட்கவில்லை. எனினும், அவர்கள் நெருக்கி அடித்துக் கொண்டு கூடிய வேகம், அதைச் சொல்கிறது.

படிக்கிறார்—எடுதாங்கி
கேட்கின்றனர்—மக்கள்.

"இதுதான் தோழர்களே, ஆரிய மாயை. இதைத்தான் தடை செய்தது சர்க்கார்" என்று படித்தவர், சொற்பொழிவாற்றுகிறார்.

காலை நேரம்—9-30 மணி! கடுமையான வெய்யில் துவங்குகிறவேளை!! எனினும், படித்தவரின் பேச்சை, ஆவலோடு கேட்கின்றனர், மக்கள்.

பேசி முடிக்கிறார்—ஒரு கையிலே கழகக் கொடியும், இன்னொரு கையிலே 'ஆரிய மாயை' எழுத்தையும் தாங்கியவண்ணம்.

மீண்டும் கை தட்டல்! 'வாழ்க! வாழ்க!' என்ற முழக்கம்.

மாயாவரம் மாநாடு

தலைவர் N. ஜீவரத்தினம் கொடியேற்றும் காட்சி.

தொண்டர் புறப்படுகிறார்—கூட்டமும் பின்தொடர்கிறது!

* * *

கடந்த முதல் தேதி அன்று, வடார்க்காடு மாவட்டத்திலே, நாம் கண்ட காட்சி இது! ஓரிடம் ஈரிடம் என்றல்ல, நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களிலே—காணக் கிடைத்த காட்சிகள், இவை!

சிற்றூர், பேரூர்களெல்லாம் அன்று சிந்தனையைக் கொள்ளை கொள்ளும்விதமாகவே இருந்தன.

வடார்க்காடு மாவட்ட முன்னேற்றக் கழகத்தாரின் முடிவையொட்டி, அன்று, அங்கெல்லாம், "ஆரிய மாயை! ஆரியமாயை!!" என்பதே பேச்சாக இருந்தது.

கையிலே எழுதிய காகிதங்களைத் தாங்கியவண்ணம் பொது இடங்களிலே நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் அன்று 'ஆரியமாயை'யை படித்தனர்; விளக்கினர்.

கருப்பும் சிகப்பும் கலந்து பறப்பது போல பெருமிதத்தோடு கூடிய கழகக் கொடியைக் கையிலேந்தி, வீர முழக்கமிட்ட அந்த வீரக் காளைகளைக் கண்டபோது, நமது இதயமெல்லாம் பூரித்தது! மண்ணிலே நடக்கிறோமா, அல்லது விண்ணிலே மிதக்கிறோமா என்பது போன்ற உணர்ச்சி நம்மைத் திணறடித்தது!

ஒரு இடம், இரண்டிடம் என்றல்ல; ஒரு மாவட்ட முழுமையும் எழுத்துரிமைப் போர். அதில் கலந்து கொண்டோரும் நூற்றுக் கணக்கான தொண்டர்கள்! பாருங்களேன், பட்டியலை:—

போளூர்—கே. சுப்பிரமணியம்
மாம்பட்டு—ஜி. கே. சாமி
அத்திமூர்—நடராசன்
குண்ணத்தூர்—இளையபெருமாள்
கரபூண்டி—பெருமாள்
ஆர்க்காடு—பார்த்தசாரதி
பூட்டுத்தாக்கு—கோபால்
திமிரி—அருணாசலம்
கலவை—வி கே. கணேசன்
ராணிப்பேட்டை—சிவராமன்
வாலாஜாப்பேட்டை — இராம. இரண்ணியதாசன்
வேலம்—வே. மு. வடிவேலு
சக்ரமல்லூர்—வி. எ. நடராசன்
சாத்தமங்கலம்—கச்சியப்பன்
சந்தவாசல்—க. ர. கணேசன்
நாரணமங்கலம்—வி. செ. சின்ன கண்ணு
சேதாம்பட்டு—தெ.கோ. தங்கவேலு
மாதிமங்கலம்- கே. பி. துரைசாமி
களம்பூர்—ஏ. கோவிந்தசாமி
வெள்ளூர்—ச. மொ. அண்ணாமலை
ஆத்துவாம்பாடி—வி.கே. பெருமாள்
அரியத்தூர்—எ. கே. மாரி
தேற்கமேடு—எ. வி. கண்ணப்பா
மடவிளாகம்—எ. பொன்ரங்கம்
கேளூர்—கந்தப்பா
கூடலூர்—எம். தண்டபாணி
காலூர்—கோவிந்தசாமி
ஆலைவாடி—ச. வெங்கடேசன்
கடலாடி—க. மு. கங்காதரன்
புதூர்—து. இராசமாணிக்கம்
எலத்தூர்—ச. கோபால்
வல்வாரணி—பி. வீரப்பா
கலசபாக்கம்—மாணிக்கம்
சேத்துபட்டு—சா. கோவிந்தன்
பழம்பேட்டை—ஜி. எம். ஏழுமலை
நமபேடு—ஏ. எஸ். கண்ணன
கண்ணனூர்—அ. கண்ணன்
வரையூர்—பரசுராமன்
திருவண்ணாமலை—இரா. தர்மலிங்கம்
துரிஞ்சாபுரம்—வேலு
வேட்டவலம்—பழனி
பென்னாத்தூர்—லோகநாதன்
நணடாராமபட்டு—வி. திருமலை
குறிசிலாம்பட்டு—சம்பந்தம்
முத்தம்பட்டி—கே. சி. அண்ணா
பெருமாம்பட்டு—கே. ஆர். நடேசன்
பாஞ்சாலிமைதானம்— கு. பாலகிஷ்ணன்
ச. நெடுஞ்சோழன்
டி. எம். ஜெயராமன்
ஈ. மன்னார்
வந்தவாசி—ஈ. தங்கவேலர்
கே. எம். ஏ. அப்துல்
தேசூர்—எம். பாலு
அம்மையப்பட்டு—பூபாலனார்
பேர்ணமல்லூர்—வி. டி. அண்ணாமலை
தெள்ளார்—பி. மருதைமுத்து
மருதாடு—எம் எஸ். அனீபா
புன்னை—ஏ. கோவிந்தராசு முனிசாமி
கோடுங்காலூர்—எஸ். கன்னியப்பன்
கோழப்பலூர்—எம். முததுசாமி
வேலூர்—கருத்தோவியன் பாபு
ஊசூர்—சினிவாசன்
பள்ளிக்கொண்டை— வி. எம். கிருட்டினன்
தோரப்பாடி—வே. சு. இராமலிங்கம்
ஒகத்தூர்—இராமச்சந்திரன்
காரப்பட்டு—ஆர்-பாலகிருஷ்ணன்
சுட்டுகுண்டா—மாணிக்கம்
சாணுங்குப்பம்— ஜெ-பெ-கோவிந்தன்
அரங்கல்துருக்கம்—ரங்கசாமி
ஆம்பூர் சண்முகம்
அரக்கோணம்—எஸ். குமாரசாமி
திருமால்பூர்—எம்-ஜெயராமன்
கீழ்வெண்பாக்கம்—எஸ்-வடிவேல்

வருக! வருக!! என, மக்களை வரவேற்கிறார்

தஞ்சை மாவட்ட தி. மு. க. மாநாடு வரவேற்புக்குழுத்தலைவர்
கே. கே. நீலமேகம்

பள்ளூர்—டி. ஆர். குப்பன்
தக்கோலம்—கே-ஜி-நாராயணசாமி
குருராஜப்பேட்டை— ஏ-பி-கோபால்
மின்னல்—பி-எம்-கோவிந்தசாமி
நாகவேடு—எம்-என்-முத்துவேல்
நெமலி—பி-கணேசன் ஆடியபாதம்
சந்தப்பேட்டை— எம்-எஸ்-தட்சணாமூர்த்தி
பேர்ணும்பட்டு—பொன்னுசாமி
வளத்தூர்—சண்முகம்
கீழ்வைத்தியணாங்குப்பம்— கே-ஜி-எஸ். வாசன்
குடியாத்தம்— எஸ்-டி-பாலகிருட்டினன்
காட்பாடி—கு. சிவப்பாதம்
சோழமூர்—நமசிவாயம்
ஆரணி—எத்திராசன்
நகரம்—ஈ. இராதாகிருட்டினன்
சைதாப்பேட்டை— ஏ-கன்னையன்
கஸ்தம்பாடி—க-ப-சங்கரர்
சேவூர்—எம். ஏ. அய்யாக்கண்ணு
ராடனமங்கலம்-சா-தா-முருகேசன்
முள்ளிப்பட்டு—ஏ-சுந்தரம்
காமக்கூர்—ர-ஆறுமுகம்
மேல்கீழமங்கலம்—திருஞானம்
கண்ணமங்கலம்—கே-பி-கண்ணன்
வல்லம்—கே-எம்-துரைசாமி
காடுகாநல்லூர—கே-டி-அண்ணாமலை
குளத்தூர்—கே-எம்-மாணிக்கம்
புதுபேட்டை—கே-எல்-மூறைப்
திருமணி—எ-சுப்பிரமணியம்
திருவத்திபுரம் — புலவர். கே- கோவிந்தன்
அசனமாப்பேட்டை—மா-நா- இராசமாணிக்கம்
வாழ்குடை—பு-து-சனார்த்தனன்
உக்கல்—வி. குட்டியப்பன்
சித்தாத்தூர்—ஈ-சரவணன்
புரிசை—பு-எம்-ஏ-கோவிந்தன்
அய்யன்பேட்டை— வி.எஸ். சின்னக் கண்ணன்

X X X

105 இடங்களில் (நமக்குக் கிடைத்துள்ளவரை) அன்று எழுத்துரிமைப் போர் நடைபெற்றிருக்கிறது

இரகசியமாக அல்ல, பகிரங்கமாக

ஒவ்வொரு ஊர் அதிகாரிகளுக்கும், மேலதிகாரிகளுக்கும் தகவல் அனுப்பிவிட்டு, எழுத்துரிமைப் போரில் இறங்கியிருக்கின்றனர்—வடார்க்காடு மாவட்ட வீரர்கள்.

"1–3–51 காலை 9 மணிக்கு .... இடத்தில் .... நான் சர்க்கார்

தடை செய்யப்பட்ட 'ஆரிய மாயை' நூலை படிக்கப் போகிறேன்" என்பதாக, ஒரு வாரத்துக்கு, முன்னதாகவே, சர்க்காருக்கு அறிவித்துவிட்டு மாவட்ட முழுமையுள்ள கழகங்கள் எழுத்துரிமைப் போரிலீடுபட்டிருக்கின்றன.

முன்னதாகவே அறிவித்துவிட்டு,
எவ்வித கலவரமுமின்றி,
அமைதியான முறையில்,

ஆளவந்தாரின் எதேச்சாதிகார முதுகெலும்பை முறியடித்துள்ளனர், நமது தோழர்கள்—வீரர்கள்!

எழுத்துரிமைப் போர் நடைபெற்ற இடங்களில் காங்கிரஸ் தர்பார் நடைபெறவில்லை. எவரும் கைது செய்யப்படவும் இல்லை. வந்த அதிகாரிகள் எல்லாம் 'ஆரிய மாயை'யை மக்கள் ஒழுங்கோடு இருந்து கேட்கவே ஒத்துழைத்தார்கள்! அவர்களுக்கும், அது என்ன, என்று கேட்க ஆசையில்லாமலா போய்விடும்!!

* * *

எழுத்துரிமைப் போரை—வடார்க்காடு மாவட்டம் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது.

இரகசியமாக அல்ல; அறிக்கைகள், விளம்பரங்கள், கடிதங்கள் மூலம் ஆளவந்தாருக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துவிட்டு.

சர்க்காரின் எதேச்சாதிகாரம், தூள்! தூள்!!

தர்பார் ஆட்சிக்கு சரியான சங்கடியைத் தந்துள்ளனர் — நமது காளைகள்.

இந்தச் சூழ்நிலைக்கு நாமல்ல காரணம்; ஆளவந்தாரின் அட்டகாசமே நம்மை தடைமீறமளவுக்கு கொண்டு சென்றுள்ளது.

எதற்கெடுத்தாலும் 'இல்லை! இல்லை!!' என்று, ஏக்கக் குரல் எழுப்புகின்றனர் மக்கள். வாழ்விலே புயல்! வறுமை! பசி! சாவு!—இது போன்ற, விசித்திர வேதனைக்கு ஆட்பட்டுக் கிடக்கிறது நாடு.

இந்த வேதனையைப் போக்க வேண்டிய சர்க்காரோ, வீணை மீட்டிக் கொண்டிருப்பதோடு, அடிக்கடி மக்கள்மீது வேல்களை வீசிக் கொண்டுமிருக்கிறது.

பசித்த அலையும் வேங்கைபோல, மக்கள் – அவர்கள்மீது வேல் விளையாட்டு!

'சுயராஜ்யம்! சுதந்திரம்!!' என்று, வானளாவ முழக்கமிட்ட காங்கிரசாட்சியில், எழுதினால் தண்டனை, பேசினால் குற்றம் என்ற போக்கு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

இந்த "வெறி," அதிகார மமதைக்கு ஆட்படுவோருக்கு ஏற்படுவது சகஜம்; சுலபம். ஆனால், காந்திய சீடர்களாகிய இவர்கள் இது போன்ற வெறி கூடாது என்று எழுப்பிய கர்ஜனைகள் ஏராளம்! எனவே, சுயராஜ்யத்தில், வெறி இருக்காது; விவேகம் அங்கே ஆட்சி நடத்தும் என்று, மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், வெறி ஒழியவில்லை; மாறாக வளர்ந்துகொண்டே இருக்கிறது.

பாயவரம் மாநாட்டைத்
துவக்கிவைத்து
காஞ்சி-கலியாணசுந்தரம்
பேசுகிறார்.

'எதுவும் தன்னிஷ்டப்படியே நடக்கவேண்டும்' என்ற, இந்த எதேச்சாதிகார வெறியின் விளைவாக, பகுத்தறிவுப் பணி புரியும், நம்மீது பாய்ந்துகொண்டேயிருக்கும் ஈட்டிகள் ஒன்றல்ல, இரண்டல்ல!

பகுத்தறிவுப் பணி புரியும், நாம் வெள்ளையன் காலத்திலும் இருந்தோம். அப்போதும், இன்றுபோல, பணி புரிந்தோம். கூட்டம் நடத்தினோம், பேசினோம், எழுதினோம், நடித்தோம்.

ஆனால், அப்போதுகூட, நாம், இத்தகைய அல்லலுக்கு ஆளாகியதில்லை.

ஆண்டது, அந்நியன் — அப்போதுகூட நாம் தாக்கப்படவில்லை; தடுக்கப்படவில்லை.

ஆனால் இப்போது? ஆள்வது நம்மவர்! நடப்பது சுயராஜ்யம்! இதிலே, நம்மீது ஈட்டி வீச்சுகள்— அடக்குமுறை அம்புகள்!!

காங்கிரஸ் கட்சியினர். ஆட்சிப் பீடம் ஏறும் 'பாக்யம்' பெற்றபிறகு, நமது இயக்கத்தின்மீது வீசியிருக்கும், அடக்குமுறைகள்—பலப்பல.

'நாடகமா?—ஆடாதே!'

'கூட்டமா? — அனுமதி கிடையாது!'

'நூல்-எழுதுகிறாயா? தடைசெய்வேன்!' இதுபோன்றே, மிரட்டி வந்திருக்கிறார்கள்.

"ஆரிய மாயை" — காரணமாக ஆளவந்தார் நடத்திய திருக்கூத்துகளின் மூலம், எத்தகைய வெறியுள்ளம் காங்கிரஸ் ஆளவந்தாரிடையே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாடு கண்டது.

எதிர்க்கட்சி—என்ற ஒரே காரணத்துக்காக, சர்க்கார் நம்மீது தடைகளை பிறப்பித்துக் கொண்டே இருக்கிறது.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம்— இம் மூன்றும், மனிதனாகப் பிறந்த எவனுக்கும் இருக்கவேண்டும்.

ஆனால், இம் மூன்றும் உயிரோடு உலவ இந்த ஆட்சியில் இடமில்லை!

இவை-மனிதனின் அடிப்படைச் சுதந்திரங்கள்!

இதற்குக்கூட வழியில்லை, சுயராஜ்ய ஆட்சியில்.

இது ஏன்? — இக் கேள்வியைத் தான், நாம் கேட்கத் துவங்கினோம்.

"கூட்டத்துக்குப் போடுகிறாயே, 144, இது ஏன்?"

"எழுதினால் தடைசெய்கிறாயே, இது ஏன்?"

"நாடகம் ஆடக்கூடாது என்கிறாயே, ஏன் இது?"

சர்க்காரைப் பார்த்துக் கேட்டோம்—பதில் வரவில்லை. தடியையும், துப்பாக்கியையும் காட்டிற்று, சர்க்கார்.

அன்போடு நாம் வேண்டி னோம், 'அடுக்குமா ஐயா, இந்தப்போக்கு?' என்று

'யாரடா நீ கேட்க' என்று, மிரட்டியது காங்கிரஸ்ராஜ்யம்.

இந்த எதேச்சாதிகாரவெறி விரிவதைக் கண்டபிறகே, நாம், ஒருமுடிவுக்குவந்தோம்.

அடிப்படை உரிமைகளை இழக்க முடியாது — என்று முழக்கமிட்டோம். தீர்மானித்தோம்.

பேச்சுரிமை காப்பது

எழுத்துரிமைக்குப் போராடுவது என்ற, அத்தீர்மானங்களையொட்டி, நமதுகண்டனத்தைக் காட்டுவதெனமுடிவு செய்தோம்.

இந்த முடிவை, பகிரங்கமாகச் செய்தோம். தெரிவித்தோம்-மக்கள் வரவேற்றனர்.

"ஆமாம்! எதேச்சாதிகாரம் வளர்ந்து கொண்டேதான் போகிறது. எதற்கெடுத்தாலும் தண்டு தூக்குகிறதே தவிர, பெருந்தன்மை யில்லை இந்த ஆட்சியில்" என்று, மக்கள் மன்றம், தெரிவித்தது—கடலலை போன்ற பொதுக் கூட்டங்கள் மூலம்.

அதோடு, நமது உரிமைப்போரையும், உற்சாகத்தோடு நடத்தித் தந்துள்ளனர், மக்கள்.

நமது மாவீரர்கள், நியாயத்தின் தூதுவர்கள் என்ற சிறப்பைப் பெற்று விட்டார்கள்.

"சட்டம் தாக்கலாம் — கவலையில்லை" என்று, வீரப் பண் பாடிய வண்ணம், எழுத்துரிமை காக்கப் போராட்டம் நடத்தியுள்ளார்கள்.

அவர்கள் செயல் — விடுதலை பெறத் துடிக்கும் திராவிடத்துக்கோர் புதையல்.

அவர்கள் 1—3—51 அன்று எழுப்பிய முழக்கம் — எதேச்சாதிகார ஆட்சிக்கோர் எச்சரிக்கை.

ஆரியமாயை! ஆரியமாயை!!என்று அன்று மக்களிடையிலே மலர்ந்த எழுச்சி—நமது வெற்றிக்கோர் பதக்கம்.

"பேசுவதும் எழுதுவதும் குற்றம். மீறிச்செய்தால் சட்டம் போட்டுத் தடுப்பேன்.........."—சர்க்கார் மிரட்டுகிறது.

"தடையை மீறினால்.........."—கூதி கேட்கிறது இப்படி.

மாயவரம் மாநாடு

பிரம்மாண்டமான பந்தலின் முகப்பு

"சட்டத்தைவீசி, தண்டிப்பேன்" —வெறி, மிரட்டுகிறது.

"சரி, பரவாயில்லை, நீதிக்குப் போராடத்தான் போகிறேன்." — உரிமையின் பதில், இது.

"போராடுவாயா? புத்திவரச்செய்கிறேன் எனது துப்பாக்கிகள்மூலம்" —எதேச்சாதிகாரம், துப்பாக்கிகளைக் கண்ணால் காட்டுகிறது.

மார்பைக் காட்டி அணிவகுத்து நிற்கின்றனர், நீதிக்காகப் போராடக் கிளம்பிய நெஞ்சுரம் மிக்கசீயங்கள்!

என்ன செய்யும், சர்க்கார்? மிரள்கிறது! 'என்ன செய்வது?' என்று கலங்கி, பின் வாங்குகிறது!!

இந்தக் காட்சியை வடார்க்காடு, விளக்கியுள்ளது.

எதேச்சாதிகாரம், தனது குரல் கண்டு நடுங்குவர் மக்கள், என்று கருதும்வகையில் மிரட்டும்.

'மீறி நடப்பர் மக்கள்' என்று தெரிந்தால், மிரளும் என்றஉண்மை வடார்க்காடுமூலம்,விளங்கிவிட்டது.

"எவரும் படிக்கவோ, கேட்கவோ கூடாது"—இதுதான், 'ஆரியமாயை' தடையுத்தரவுக்கான காரணம்.

"எல்லோரும் கேட்கும் அளவில் அதைப் பரப்புவோம்!! இதுவே, 1—3—51 அறப்போரில் ஈடுபட்டோரின், பிரகடனம்.

தடுத்தது சர்க்கார்!

மீறியது மக்கள்!!

ஆனால், மிரட்டிய சர்க்காரோ,என்ன செய்யவேண்டுமோ, அதைச்செய்ய வில்லை. வீரர்கள்— உலவுகின்றனர், வெற்றிக் களிப்போடு!

தர்பார் ஆட்சி — தலை குனிந்து கிடக்கிறது-அவமானத்தோடு!!

எதேச்சாதிகாரப் பாதையில் நடக்கும் எந்த சர்க்காருக்கும்,இந்தஅவமானக் சட்டம்தான், ஏற்படும்.

இதை, வடார்க்காடுமட்டுமல்ல; உலக வரலாறே, கூறுவதாகும்.

ஆனால், காங்கிரஸ் ஆட்சியாளரோ இந்த உண்மையை உணராதது போல—வெறி அதிகமாகும்போது உறுமுவதும், உறுமலின்விளைவாக வேதனை வந்தால், வளைந்துநெளிவதுமாக உள்ளனர்!

வெட்கங்கெட்ட நிலை!

உரிமைகளைப்பறிக்கும் எந்த ஆட்சிக்கும், இந்த 'வெட்கங்கெட்டநிலை' தான், பரிசாகக் கிடைக்கும்.

வடார்க்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக வீரர்களின் உரிமை முழக்கம், இந்தச் சர்வாதிகார ஆட்சிக்கு நலல படிப்பினையைத் தந்துவிட்டது. இத்தகைய செயற்கரிய செயலைச் செய்து காட்டிய மாவீரர்களை வாழ்த்துகிறோம்! திராவிடத்தின் அன்பை, அவர்களுக்குப் படைக்கிறோம்! வாழ்க, உரிமை வீரர்கள்!! வளர்க உரிமைத் தாகம்!!

திருச்சி மாவட்ட தோழர்களுக்கு; அறிவிப்பு

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் கிலேதார் தெருவிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. வெளியூர் தோழர்கள் தங்குவதற்கும், கழக வேலைகளை நல்ல முறையில் நடத்துவதற்கும் வசதியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் இனி வெளியூர் கிளைக் கழகங்களும், தோழர்களும் அடியில் கண்ட முகவரிக்கு எழுதவும். வரவும்.

முகவரி:—

சேயலாளர்,
திருச்சி மாவட்ட தி. மு. கழகம்,
கிலேதார் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சி.

நெஞ்சைக் கவர்ந்த தஞ்சை!

முத்தார மார்போ, முழுநிலவு முகமோ, வித்தாரச் சிற்பமோ, விவேகத்தின் சொரூபமோ—இது போல அவன் ஏறு நடை காண்போர் பேசிக்கொள்ளுகின்றனர்.

விழியிலே கனிவு, மொழியிலே குழைவு, மூச்சிலே வீரம், கருத்திலே தெளிவு, கனிச்சொல் தரும் அக்காளையைப் பாரீர்! — என்று, அவனைப் பார்ப்போர், பாராட்டுரையை அள்ளி யள்ளி வீசுகின்றனர்.

'எத்தன்!' 'இல்லை, பித்தன்!' 'எதற்கும் உதவாதவன்' — இது போன்ற சுடுகணைகள், இன்னொரு முனையிலிருந்து சிலரால், வீசப்படுகின்றன. அவனுக்கோ, இதெல்லாம், காதில் ஏறவில்லை. அவன் நல்லவன்' என்ற புகழுரையைக் கண்டு பூரித்துப் போனதாகவோ, 'நாசகாலன்' என்ற அவமதிப்பைக் கண்டு மருண்டு விட்டதாகவோ தென்படவில்லை.

அவன், நடந்துகொண்டே இருக்கிறான்.

செருப்பில்லாத கால்—எனினும், அதுபற்றிய சிந்தனையே யில்லை அவனுக்கு.

சீப்பு காணாத தலை காற்றிலே பறந்துகொண்டிருக்கிறது—அதுவும், அவன் கவனத்தைக் கவர்ந்ததாகத் தென்படவில்லை.

கந்தலாடை, கிழிந்து தொங்கும் மேலங்கி— அவன் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை.

ஏறு, நடை போட்டுச், சென்று கொண்டேயிருக்கிறான்.

அவன் விழியின் சுழற்சியில் வீழ்கின்றனர் பலர்! மொழி கேட்டு மோகங் கொள்கின்றவர் ஏராளம்! சிக்கவைக்கும் சிரிப்பு! சொக்கச் செய்யும் சுந்தரப் பேச்சு!

அவன் ஏழை – ஆனால் கோழை யல்ல!

அவன் காசில்லாதவன்; கபடனல்ல; கருத்தின் காவலன்!

அவனைக் காண்போர், 'இவனாலா இவ்வளவு காரியம்? ஏ! அப்பா' என்று வியப்பைப் பேச்சாக்குகின்றனர்.

அவனோ, 'ஆமாம்!' என்று பதில் தரவில்லை. திரும்பிப் பார்க்கிறான்.

பல்லாயிரக்கணக்கான உருவங்கள் வீரப்பண் பாடியவண்ணம் சிங்க நடைபோட்டு, சிங்காரத்தோடு வந்துகொண்டுள்ளனர்.

* * *

அற்புதமான காட்சி! தென்னஞ் சோலை, அங்கே சுற்றிப் பண்பாடும் சுந்தரத் தென்றல்! வெயிலை விரட்டி வெண்மதியைக் கூட்டிவரும் பந்தல்! அங்கே புகுந்து விளையாடும் அற்புதமான காற்று! அழகு மேடை. அங்கே சல, சலவெனப் பாய்ந்தோடும் கருத்து அருவிகள்! அதிலே குளித்துக் குதூகலத்தோடு கூடிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான பயமறியா வீரர் படை!

தஞ்சைத் தரணியிலே கடந்த மார்ச 3, 4 தேதிகளில் நடைபெற்ற மாநாட்டைக் கண்டபோது, நமது நினைவிலே, புதுப் புதுக் காட்சிகள் உருவாயின.

"அற்புத காட்சி!" என்றது, கண். "இல்லை! நம் தொண்டின் மாட்சி!" என்றது, வாய். "உன்னால் முடியாது—இதைப் பற்றி பிறருக்குச் சொல்ல!" என்று, கூறியது, இதயம்-

பாசறை அமைத்தது போல போட்டிருந்த பிரமாண்டமான பந்தலும், அங்கே, இரவும் பகலும் இங்கு ஒன்றுதான் என்று எடுத்துக் காட்டுவது போல ஒளி வீசிய மின்சார அலங்காரமும், 'வருக! வருக!!' என்று ஊர் முழுதும் செய்யப்பட்டிருந்த அலங்கார வளைவுகளும், ஆணிப் பொன் எழுத்துக்களும், "மாளிகையின் வாயிலோ! கோட்டையின் முகப்போ! கொத்தளக் கல் கொண்டு கட்டியதோ!" என்று திகைக்க வைக்கும் வகையில் பெருமித அலங்கரிப்போடு திகழ்ந்த பந்தலின் வாயிலும், அங்கே, புன்சிரிப்போடு 'பொதுச் சேவையின் பலனைப் பார்!' என்று கூறுவதுபோல இளமை முகத்தோடு காட்சி தந்த மாவீரர் மாயவரம் சி. நடராசனின் திரு உருவமும், அப்பப்பா, எழுதவும் இயலாது! எடுத்துச் சொல்லவும் முடியாது!!

விதவிதமான அலங்காரங்கள், பந்தலுக்குள்! வெண்ணிலாவும் குளிர் காற்றும் வீசுவது போன்ற இடம்! அங்கே அஞ்சா நெஞ்சன் அருமை வீரன், மறைந்த தலைவர் அழகிரியாரின் அன்புருவம் அமைக்கப்பட்ட அழகிய மேடை!

மற்றோர் புறம்— காய்கறி மலை சோற்றுக் குவியல்! அதைக் கையில் தாங்கிப் பரிமாறத் துடிக்கும்— விருதுநகர் சமையற்காரத் தோழர்கள்!

சிந்து பாடியோடும் காவிரியின் கரையிலே, மாயவரம் நகரிலே;' இத்தகைய காட்சிகளைக் காணக் காண நமது இதயமெல்லாம் பூரித்தது.

இந்தப் பூரிப்பை வெளியிட்டுப் பேசினார் மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள்.

"நம் கழகம் துவங்கி சுமார் 1½-ஆண்டுக் காலத்தில் நாம் இதுவரை 11 மாநாடுகளை மிக மிக வெற்றிகரமாக நடத்தி இருக்கிறோம்"-என்று, அவர் கூறியதைக் கேட்டபோது, நமது கவனத்தில் தலைப்பிலே நாம் சித்தரித்த 'ஏழை - ஆனால் கோழை யல்ல' என்ற காட்சி, ஓடிவந்தது.

பத்திரிகைப் பலமில்லை! பண வசதியில்லை!!—எனினும் நமது பிரச்சாரம் பாயாத இடமில்லை. கல்லும் முள்ளும் – நாம் தினசரி காணும் காட்சிகள். சுடுசொல்லும் கடுந் தாக்குதலும் நாம், அடிக்கடிபெறும் பரிசுகள்.

ஆயினும், நமது கழகம், வசதியில்லாத வாலிபனைப்போல ஏறுநடை போட்டவண்ணம் நடந்துகொண்டுதானிருக்கிறது—பல்லாயிரக் கணக்கான படைவீரர்கள்பவனி வர!

இந்தப் பவனியைக் காணப் பாடுபடும் நமது கழக முன்னணி வீரர்

களின் வியர்வையையும் சிரத்தையையும், வீராவேசத்தையும் எடுத்துக் காட்டியது—தஞ்சை மாநாடு. அங்கே கூடிக்கிடந்தோரின் தொகை கண்டு பூரித்துப் போனார் தோழர் நீலமேகம்—அந்த வெற்றி மகிழ்ச்சியில், வீரமுழக்கமிட்டார்.

“உலகயுத்தம் நடந்துகொண்டிருந்தபோது எதிரி விமானம் விண்ணில் பறந்துகொண்டிருந்த நேரத்தில் கூட 16 அவுன்ஸ் அரிசி கொடுத்தது வெள்ளை ஏகாதிபத்தியம். இப்போது சுதந்திரம் வந்துவிட்டதென்று விழா நடத்திவிட்டு படிப்படியாக அரிசிப் பங்கீட்டைக் குறைத்து 7-அவுன்ஸ் கொடுக்கிறது வடநாட்டு ஏகாதிபத்தியம். அதுவும் சில ஊர்களில் கிடைப்பதில்லை. மக்கள் பட்டினியால் வாடி உயிர் விடுகிறார்கள். தென் மாவட்டங்களிலிருந்து மக்கள் தங்களுடைய சொத்து சுதந்திரங்களை விட்டு லட்சக் கணக்கில் இம்மாவட்டத்திற்கு குடியேறி அகதிகளாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திர சர்க்கார் இந்த அகதிகளுக்கு எந்தவிதமான ஆதரவும் தராமல் அவர்களை பிச்சை எடுத்துக் கொண்டு ஊரில் அலைய விட்டிருப்பதைக் கண்டு மனம் பதறுகிறது.

பொது மக்கள் மீது ஒவ்வொரு வருடமும் அதிகப்படியான வரிபளுவை சுமத்தி வசூலிக்கும் வரிப்பணம் மந்திரிகளை அதிகப்படுத்துவதிலும், புதுப் புது பதவிகள் ஏற்படுத்தி சம்பள மூலமும், போக்குவரத்து செலவுகள் மூலமும் செலவிடப்படுகிறதைப் பார்த்து மனம் பதறுகிறது. இதுபோலவே பல பொருள்களின் மூலம் விதிக்கப்படும் வரிச்சுமையினால் அகவிலை கூடுதலாக்கி இந்நாட்டில் மக்கள் வாழ்வதைவிட மாள்வதுமேல் என்று எண்ணத்தக்க நிலையை அரசாங்கம் உண்டு பண்ணி வருகிறது. நாட்டு நலத்தில் கவலையுடைய அறிவாளிகளும், பொதுமக்களும் நன்கு சிந்தித்து இந்த தொல்லைகளிலிருந்து மீள ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

மதமற்ற சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு எல்லா ஜாதிமதங்களையும் சுதந்திரம் வருவதற்கு முன்பு இருந்ததைப்போலவே இருக்க அனுமதித்துக்கொண்டு இருக்கும்போது நம் ஆலயங்கள் ஓர் அளவுக்கு முன்னுக்குவர உதவியாக இருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை மட்டும் ஒழித்துவிட்டது மத்திய அரசாங்கம். நம் உரிமைகள் அரசாங்கத்தாரால் பறிக்கப்பட்டுவருகிறது.

ஜனநாயக சர்க்காரில் பேச்சுரிமை எழுத்துரிமை ஆகியவைகள் உண்டு என்று சொல்லிக்கொண்டே அதற்கு முரணாக புதுப்புது அடக்குமுறை சட்டங்களியற்றி, அரசாங்கத்தின் தவறுகளையும் குறைகளையும் நாம் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் தடை விதித்து தடியடி தர்பார் நடத்தியும் சுட்டுத் தள்ளியும் நமக்குப் பல தொல்லைகளை அரசாங்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

நம் மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டு அவர்களின் கைப்பாவையாக இருக்கின்ற காரணத்தால் நம் மக்களுக்குத் தேவையான எந்தக் காரியத்தையும் மத்திய சர்க்காரைக் கேட்காமல் செய்வதற்கு முடியாத நிலையிலிருக்கிறார்கள். உணவு உடை முதலிய எல்லாவற்றிற்கும் வடநாட்டையே எதிர்பார்த்து நிற்கும் நிலையிலிருக்கிறது நம் மாகாண சர்க்கார், இம்மாகாணத்தில் வசூலாகும் வரித்தொகையில் பெரும் பகுதியை வடநாட்டுக்கு அனுப்பிவிட்டு எதற்கெடுத்தாலும் பணமில்லை என்று பஞ்சப்பாட்டு பாடுகிறது நம் மாகாண சர்க்கார்.

நம் நாட்டு மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டு வடநாடு சென்ற ஆச்சாரியார் மத்திய அரசாங்க மந்திரியாக வீற்றிருக்கிறார். அவர் ஒரு காலத்தில் “இந்நாட்டை ஆண்டால் நாங்கள் ஆளுவோம் இல்லாவிட்டால் துப்பாக்கி முனை ஆளும்” என்று சொன்னார். அப்படிப் பட்டவரின் ஆளுகையின் கீழ் அவர்கள் இஷ்டப்படி துப்பாக்கி முனையில் நம்மை ஆள அரசியல் திட்டம் வகுத்து அமுல் நடத்தி வருகின்றார்கள். சில நாட்களுக்கு முன்பு கூட எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காகவே ஒரு பாதுகாப்புச் சட்டத்தை ஆச்சாரியார் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இந்நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததற்கு காரணம் காங்கிரஸ் காரர்கள் பலாத்கார முறையில் தந்திக் கம்பியறுத்தல், தபாலாபீசு கொளுத்தல், தண்டவாளம் பெயர்த்தல் அதிகாரிகளின் முகத்தில் திராவகம் ஊற்றல், பாலம் உடைத்தல் முதலிய நாசவேலை செய்ததுதான் என்று சொல்லிக்கொண்டு அப்படிச் செய்தவர்களுக்கும் இதர காங்கிரஸ் காரர்களுக்கும் இந்த அரசாங்கம் தியாகத்தின் பேரால், அரசாங்க பொதுச் சொத்திலிருந்து 5-ஏகர் 10-ஏகர் என்று தியாக மானியம் கொடுத்திருப்பது நேர்மையற்றதும் நியாயத்துக்கு புறம்பானதுமாகும் தங்கள் கட்சிக்காரர்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமானால் இவர்கள் நீதியான அரசாங்கம் நடத்துபவர்களானால், காங்கிரஸ் நிதியிலிருந்தோ அல்லது காங்கிரஸ் காரர்களிடம் நிதி வசூலித்தோ தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கொடுத்திருந்தால் அது நேர்மையான செயலாகும் சுதந்திரம் பெற்றவுடன் காங்கிரஸ் கலைக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அரசாங்கம் அவர்கள் கையில் இருக்கிறதென்பதற்காக தங்கள் கட்சிக்காரர்களுக்கு அரசாங்க சொத்தைக் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கி; வரப்போகிற பொதுத்தேர்தலில் ஆங்காங்கு தங்கள் கட்சிக்கு வேலைசெய்வதற்கென்றே இத்திட்டம் — ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் காரர்கள் கையில் அரசாங்கம் இருப்பதால் பொது மக்களை மிரட்டி ஓட்டு சேகரிக்க ஆங்காங்கு தங்கள் கையாட்கள் இருப்ப

திருச்சி
சர்தார் பட்டேல் பந்தலில்
31—3—51
உழவர் மாநாடு
1—4—51
கிராம பஞ்சாயத்து
மாநாடு
நடைபெறும்.

ஜில்லாபோர்டு, முனிசிபல், கிராம பஞ்சாயத்து இவைகளின் தலைவர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் வருகிறார்கள். அண்ணாதுரையும் அழைக்கப்படுகிறார். (A)

தற்கு இதுவும் ஓர் வழியாக கையாளப்பட்டிருக்கிறது.

நம் கழகத் திட்டங்களில் ஒன்றான ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முறையில் இந்நாட்டு மக்கள் எல்லோரும் ஒன்றாகி ஜாதி மத வேறுபாடு இல்லாமல் ஜாதி மதங்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால் கலப்புமணம் நடைமுறையில் கொண்டுவரவேண்டும். தீண்டாமை என்னும் கொடிய தொத்து நோய் அடியோடு அகலவேண்டும். திராவிட சமுதாயத்தில் விதவை என்ற பட்டம் இன்னும் இருந்து வருவதைக் கண்டு வெட்கப்படவேண்டிய நிலையிலிருக்கிறோம். இதைப்போக்க விதவை மணம் மிக மிக அவசியமாகும். மனைவியை இழந்தவர்கள் கன்னிப்பெண்களை மணம் செய்வது சட்ட விரோதமென்றும் அக்குற்றத்துக்கு இரண்டுவருட கடுங்காவல் தண்டனை என்று சட்டமியற்றவேண்டும் அப்பொழுதுதான் மனைவியை இழந்த ஆண்கள் கணவனை இழந்த பெண்களை மணக்க முன்வருவார்கள். இக்காரியத்துக்கு நமது கழகம் அதிகமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

நம் நாட்டு மக்கள் சிலோன், பர்மா, மலாய் முதலிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்டு மிகவும் கஷ்ட நிலையில் இங்கு வந்து சேருகிறார்கள். இவ்விடமிருக்கும் நெசவாளிகளுக்கு நூல் கிடைக்காமல் வேலையின்றி அலைகிறார்கள். ஆகவே நம் நாட்டு மக்கள் வாழ வழியின்றி திண்டாடும் நேரத்தில் அவர்களுக்கு எவ்வித உதவியும் அளிக்காமல் மாகாண அரசாங்கம் வடநாட்டிலிருந்து அகதிகள் என்ற பெயரால் பல லட்சக்கணக்கான மக்களை இம்மாகாணமெங்கும் குடியேற்றி அவர்களுக்கு தனிச் சலுகையளித்து வருகிறது. மத்திய அரசாங்க உத்திரவுக்கு கீழ்ப்படிந்து மாகாண அரசாங்கம் அவர்களுக்கு உத்தியோகம் மூலதனம் முதலியவை கொடுத்து வருகிறது. இது நேர்மையும் நீதியும் ஆகுமா? தன்னைப் பெற்ற தாய் தட்டுப்பிச்சை எடுக்கிறாள் மகன் கும்பகோணத்தில் கோதானம் கொடுக்கிறான் என்ற பழமொழி சொல்வதுபோல் மாகாண அரசாங்கம் நடைபெறுகிறது. வருடத்தில் 9 மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் மந்திரிகள் ஒவ்வொரு ஊரையும் சுற்றிப் பார்த்தால் குடிக்கக் கஞ்சியின்றி உடுக்க உடையின்றி மக்கள் உயிர்விடும் கோரக் காட்சியை அவர்கள் கண்ணால் காண முடியும்.

இந்தியாவிலிருக்கும் படியான போலீசு இலாகாவில் பெயர் பெற்றது சென்னைப் போலீஸ். அவர்களை அவர்களுக்குஏற்பட்ட பொது மக்களைப் பாதுகாக்க, கொலையாளி திருடன் முதலியவர்களைக் கண்டு பிடித்து நல்ல முறையில் ஊரைப் பாதுகாத்து வரவேண்டிய அவர்களை அவர்களது வேலையை செய்ய விடாது இந்த அரசாங்கம் நம் கழகத் தோழர்களையும் இதர எதிர்கட்சியாளரையும் கண்காணித்து வர உபயோகப்படுத்தி வருவதால் தான் அவர்கள் பாதுகாப்பு வேலையை கவனிக்க முடியாமல் செய்யப்பட்டு அடிக்கடி நாட்டில் கொலை கொள்ளை முதலியவை ஏற்பட்டு வருகிறது. அந்த இலாகாவிலிருப்போருக்கு போதுமான சம்பளமும் தரப்படுவதில்லை. மந்திரிகள் மட்டும் வெளியிலிருந்தபோது ரூ. 500-க்குமேல் யாருக்கும் சம்பளம் கொடுக்கமாட்டோமென்று சொன்னவர்கள், மந்திரிபீடம் ஏறியவுடன் தங்கள் சம்பளங்களை மட்டும் ரூ. 1500/-ஆக உயர்த்திக் கொள்ளத் தவறவில்லை.

ராமராஜ்யம் நடக்கிறதென்று சொல்லிக்கொண்டு ராமபக்தர்கள் கூட்டமான, நாமம் போடும் அய்யங்கார்களையே மத்திய சர்க்காரில் அதிகமாகப் புகுத்தி வருகிறார்கள். வகுப்புவாரி நியமனம் இல்லை என்று சொல்லி மத்திய சர்க்கார் பணிமனைகளை அய்யங்கார்களையும் அய்யர்களையும் கொண்டு நிரப்பி வருகிறார்கள். நாம் சமூக நீதிக்காக பெரியகுளத்தில் ஓர் மாநாடு நடத்தி இருக்கிறோம். அதன் தீர்மானங்களையும் செயல்முறையில் கொண்டுவரவேண்டிய நிலையிலிருக்கிறோம். ஜாதி மதங்கள் இருக்கும் வரையில் ஒவ்வொரு சமூகத்துக்கும் அந்தந்த சமூகத்தின் மக்கள் எண்ணிக்கைக்கேற்ப உரிமை கொடுத்தே ஆகவேண்டும்.

மேலே குறிப்பிட்ட கஷ்ட நிலைகளிலிருந்து நாம் மீள ஓரே வழி நாட்டுப் பிரிவினைதான் வடநாட்டுத் தொடர்பிலிருந்து நாம் விடுபட வேண்டும். சிலோன், பர்மா முதலிய நாடுகளைப்போலவே நாமும் பூரண சுயேச்சையுடன் நம் நாட்டு அரசாங்கம் நம் மக்களைக்கொண்டே அன்னியர் தலையிட இடமின்றி

எட்டு வாரங்களாக திக்கெட்டும் முரசொலித்துவரும்
ஓர் சிறந்த தி. மு. க. பிரசார இதழ்!

“முன்னேற்ற முரசு”

திராவிடர் வார வெளியீடு ★ ஆசிரியர் பி. ராமசாமி

❁ அனல் தெறிக்கும் கருத்தோவியங்கள்!
❁ ஆராய்ச்சி நிறைந்த கட்டுரைகள்!
❁ இன உணர்வைத் தூண்டும் கதைகள்!

சிந்தனையைக் கிளறும் கார்டூன் படங்கள்
வாரம் தவறாமல் மலரை அலங்கரிக்கின்றன.

கலைப் பகுதி! மக்கள் மன்றம்! — புதிய அம்சங்கள்

தனிப் பிரதி 2 அணா ★ ஆண்டு சந்தா ரூ 6.

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதுக!

“முன்னேற்ற முரசு” அலுவலகம்
18. ஜி. ஏ. ரோடு சென்னை 21.

நடைபெறவேண்டும். இந்த நம்முடைய திட்டமான 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கம் வெற்றிபெற வேண்டும்."

K. K. N. முழக்கம் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் ஒலியாக அங்கே முரசொலித்தது.

நாட்டின் நிலையையும், அதைப் போக்கி நல்வாழ்வு இங்கே மலரச் செய்யவேண்டும் என்ற நமது ஆசையையும், அவர் வெளியிட்டார்.

நாடு நலம் பெறவேண்டும்!—இது தான் நமது ஆசையேயொழிய அரசியல் இலாபமல்லஎன்பதை தஞ்சை மாநாட்டைத் துவக்கிவைத்தகாஞ்சி வீரர், சுயமரியாதைச் சூரர், எழுத்துச்சிற்பி, அறிவுக்சுரல, தோழர் காஞ்சி கல்யாணசுந்திரம் அழகாக விளக்கினர்.

"நம் இயக்கம், அரசியல் இயக்கமா, சமுதாய இயக்கமா என்று முடிவு கூறுவதே முடியாததுதான் தெளிவானவிடை சொல்வது மிக கஷ்டமானதுதான் ஆனால் அரசியலில் நாம் மக்களாட்சிமுறையை வரவேற்கிறோம் — வேண்டுமெனக் கூறுகிறோம்.

மக்களாட்சி முறை யென்றால் என்ன? மக்களுக்காக,மக்களாலேயே நடத்தப்படும் ஆட்சிதானே! எனினும் அந்த மக்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் மக்கள் தங்கள் அரசியல் எப்படி அமையவேண்டும் என்று அறிய முடியாதவர்களாக இருக்கிறார்கள். தாங்களே சிந்தித்து ஒருமுடிவிற்கு வரும் நிலையில் இல்லை. இவர்களைத் திருத்த, அதிகாரத்தில் ஆசையுள்ளவர்கள் முன்வரமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் திருந்திவிட்டால், அவர்கள் அதிகாரத்திலே இருக்கமுடியாதே! ஆகவே, திருந்தாத மக்களிடம் அர்த்தமற்றபேச்சுகளால் தேர்தல் திருவிழா நடத்துவார்கள்.

இன்றைக்கு யார் ஆட்சிபீடமேறினாலும் என்ன சாதித்துவிடமுடியும்? நாமே, தேர்தலில் கலந்து ஆட்சியைக் கைப்பற்றினாலும் என்ன நடக்கும்? திறமைசாலிகளை அனுப்பலாம். அத்தோடுபோதுமா? அதற்கு மேல் எதையும் செய்யவிடவில்லை. அரசியல் அமைப்பு அப்படி—அதனால்தான் நல்லகாரியம்எதும் செய்ய முடியவில்லை.

இத்தகைய நிலையில் நாம் தேர்தலில் நின்று என்ன செய்வது? நாம் ஒரு எதிர்க்கட்சியாக அமர்ந்தாலும் வருகிற இலாபம் என்ன?

நாம் விரும்பும் சட்டம் செய்ய முடியாது. இன்றைக்குமந்திரிகளாக உள்ளவர்கள் அடையுந் துன்பங்களையும், நமக்கு ஏற்பட்டுவரும் ஆதரவையும் கணக்கிட்டுப் பார்த்தால் நிலைமை புரியும்.

அன்று இந்த மந்திரிகள் மக்களைப் புகழ்ந்தார்கள் — இன்று இவர்களே மக்களை நிந்திக்கிறார்கள். ஒரு நாள் மந்திரி சஞ்சீவி ரெட்டியார், இரயில் பிரயாணம் செய்யும் போது கேட்ட வகுப்பில் வசதியில்லாததால், வேறு வகுப்புக்குப் போகவேண்டி வந்துவிட்டது. அப்பொழுது அவர் "என் உடம்புக்கு எந்தவிதமான தொந்திரவுமில்லாமல் காப்பாற்றுவதாக உறுதி தந்தால் எந்த வண்டியிலும் வருகிறேன்" என்றாராம். இதிலிருந்து தெரிகிறதல்லவா, மந்திரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு—இதனால்தான் சட்டசபை நுழைவு கூடாது என்கிறோம்.

அந்த சபலம் மட்டும் நமக்கு வரக்கூடாது. நம்மிலே சிலர் இந்த ஆசையை வளர்த்துக்கொண்டிருப்பார்களானால், அதனை விட்டுவிட வேண்டும்.

கல்லூரியில் பல பேராசிரியர்கள் இருக்கிறார்கள்—நாட்டு மக்களுக்கு நாமும் பேராசிரியர்களாக இருப்போம். மந்திரிகளையே நாம் தயார் செய்யமுடியும்! நாம் மந்திரிகளாகிச் செய்வதைவிட, வெளியிலிருந்து அதிகம் செய்யலாம்.

காரைக் கண்டுபிடித்தவன் மந்திரி அல்ல இரயிலை செய்தவன் மந்திரி அல்லஒலிபெருக்கியைஅமைத்தவன் மந்திரி அல்ல உலகத்திற்கு நன்மை செய்தவர்கள் எவரும் மந்திரிகளாக இருந்ததில்லை. பிளேட்டோ அரசியல் மேதை, அரிஸ்டாடில் அரசியல் வல்லுநர் — அறிஞர்கள் எல்லாம் மந்திரிகளாகனதில்லை — ஆகவே அதிகார அரசியலை எதிர்க்கிறோம்" என்பதாக, எது நமது அரசியல் பாதையென்பதை, அவர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

இன்றைய தேர்தல் ஒரு செல்லாக் காசு! அதை வைத்துக்கொண்டு விளையாட நாம் தயாராக இல்லை என்று அவர் கூறியபோது, பலத்த கைதட்டல் எழுந்தது.

மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர் பகுத்தறிவு வீரர், இலட்சிய முரசு, இதயங்கலங்காச் சீயம், தோழர் என். ஜீவரத்தினம், நாட்டின் நிலையை, படம்பிடித்துக் காட்டினர்.

"நாம் இப்படி மடைமையிலும், வறுமையிலும் வாடி வதைவானேன்? எஸ்கிமோக்கள் வாழும் பனிக்கட்டிப் பாப்பா? மனித சஞ்சாரம் இல்லாத ஆப்பிரிக்கக் காடுகளா? மனித உற்பத்திக்காலத்தில் இருந்து அறிவிற்கு ஆதாரமாய் இருந்த அறிஞர்கள் பிறந்த நாடு என்று பிறமொழியாளரும், பிறதேசத்தாரும்சரித்திரவாயிலாகச் சான்றுகள் கூறக்கேட்டுக்களிப்பு அடைகின்றோமே! நம்முடைய நாட்டிற்குத் திருவிடம் (திராவிடம்) அழகிய இடம் என்று பெயரிட்டு அழைத்தார்கள் என்று அந்த நாளிலேயே கூறக்கேட்டுஆனந்தம் அடைகிறோமே! வற்றாத ஜீவநதிகள் நம்நாட்டின் குறுக்கு நெடுக்காகப்பாய்வதைக் கண்டு பரவசம் அடைகின்றோமே உலகத்தார் உழுதுண்டு பயிர் செய்து பயன் அடையத்தெரியாத காலத்திலேயே,உழுது பயிர் செய்து, உண்டுகளித்துப் பரவசம் அடைந்தது. "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை; பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்று கூறும் அளவிற்கு ஆளாகிப் "பொங்கல்" திருநாளைப் போற்றி வாழ்ந்து வந்தோம்!

(13-ம் பக்கம் பார்க்க)

"பகுத்தறிவு"

ஆசிரியர்.

ப. கண்ணன்.

மாசி இதழ் வெளிவந்துவிட்டது. அறிவுப் பொக்கிஷமாக! எங்கும் நல்ல விற்பனை. நீங்கள் படித்தீர்களா?

தனிப்பிரதி இரண்டு அணாதான்.

பகுத்தறிவு அலுவலகம்.
சலகண்டாபுரம்,
(A) சேலம் மாவட்டம்.

சிறுகதை

★ மனித மந்தை ★

மந்தை மந்தையாக ஆடுகள் மிரண்டோடின — யாரும் விரட்டவில்லை — இருந்தாலும், சிதறிபோயின, அந்த செம்மறியாடுகள்!

அதோ, கண்களில் செந்தீ கொழுந்து விட்டெரிய ஓடி வருகிறாள், ஒரு பெண் — ஆம், அவள்தான் மந்தவெளி மாரியம்மன்!

மாரியம்மன், ஊரிலே கொள்ளை நோய் கொடுப்பவள் — கொடுமை புரிபவளுக்குக்கூட கோயில், அவளுக்கும், தெய்வப் பட்டம், படையல், பூசை, விழா எல்லாம் உண்டு — பக்தியே, 'பயந்தாங் குள்ளிகளின்' மூளையிலேதானே உற்பத்தி!

ஒரு மூளியான கோயில்-அதற்கு முன்னால் மூர்க்க புத்தி படைத்த ஒரு கூட்டம் — அவர்களுக்கிடையே இரண்டு ஆடுகள், குளுப்பாட்டி, மஞ்சள் பூசி, மாலையிட்டு நிறுத்தியிருந்தார்கள்.

ஓடிவந்தாள், மந்தவெளி அம்மன் — உரக்கக் கூவினாள் —

"வெட்டாதீர்கள் ஆடுகளை—வெட்டினால், வைசூரி போட்டு ஊரையே அழித்துவிடுவேன் நீங்களாடா, என் பக்தர்கள்—நீங்கள் மகா பாதகர்கள்! என் பெயரே மந்தவெளி அம்மன்—இந்த மந்தைகளைக் காப்பது என் கடமை. நீங்களோ, இரண்டு ஆடுகளைக் கொண்டுவந்து எனக்கு வெட்ட வந்து விட்டீர்களே துஷ்டர்களே! எனக்கு படைக்க நீங்கள் யார்? என் பசி போக்கிக் கொள்ள எனக்கு சக்தியில்லையா? ஆடு வேண்டுமானால், எனக்கு எடுத்துக்கொள்ளத் தெரியாதா?"

"தாயே, இப்படி பேசலாமா?—கொஞ்சநேரத்திற்கு முன்னாலே, இந்தத் தறுதலை அப்படித்தான் சொன்னான் — அவனையே வெட்டி விடுவோம் என்று மிரட்டினோம் — அடங்கிவிட்டான், அறிவு கெட்டவன்."

"அவனுக்கு அறிவு கெடவில்லை. உங்கள் புத்திதான் சரியில்லை. என்னைத் தெய்வம் என்று நம்புவது உண்மையானால், சகல சக்திகளும் உண்டெனக்கு என்று ஒப்புக்கொள்வது உண்மையானால், எனக்கு நான் படைத்த உயிரையே பலியிடத் துணிவீர்களா?"

"மாதா, அதுதானே வழக்கம்!"

"வழக்கம் என்று சொல்லி எங்கள் கடவுள் குலத்தையே இன்று காட்டிக் கொடுத்துவிட்டீர்கள்! கணக்கற்ற கடவுள்களைச் சொல்லி, ஆளுக்கு குடும்பம் ஏற்படுத்தி கோயில்கள் பல கட்டி, திருவிழா, படையல், வாணவேடிக்கை செய்து, எல்லாம் வெறும் பொம்மை விளையாட்டு என்று காட்டிவிட்டீர்கள்"

மந்தைவெளி அம்மன், 'காவு' கொடுக்கவந்த ஆடுகளை விரட்டிவிட்டாள். அந்த ஆடுகள் ஓடுமுன், அங்கு கூடியிருந்த 'மனித மந்தை' சிதறியோடிவிட்டது.

x x x

அம்மன் அருளைப் பெற தெய்வப்படைப்பில் ஓர் உயிரைப் பலியிடுவது என்ன நியாயம்? கருணையில்லாதது ஒரு புறமிருக்கட்டும்—கருத்தில்லையே! உணவுப் பொருளாக உட்கொள்கிறார்கள்-அர்த்தமிருக்கிறது. ஆனால், ஆண்டவன் பூஜைக்கு, ஆடு வெட்டுவதும், கோழியறுப்பதும் எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

மனித அறிவு வளராதகாலத்தில் மனிதன், 'முழுமனிதன்' ஆகாத நேரத்தில், காட்டுமிராண்டி காலத்தில் வெட்டினான் — வீழ்த்தினான் — இரத்தத் துளிகளைத் தெளித்து தனது முரட்டுபக்தியை தீர்த்துக் கொண்டான்.

இந்த காலத்திலும் அது ஆகுமா? ஆடு கேட்கிற சாமியும் ஒரு சாமியா—அது கசாப்புக்கடைக்குப் போகட்டுமே........என்று இப்படித்தான் கூறி அவன் தடுத்தான். அவனை ஆதரித்தோர் மிகச்சிலர்! வைரங்கள் அதிகமில்லாததால் அதன் மதிப்பு குறைந்தாவிடுகிறது — மணல் நிறைந்துதானிருக்கிறது — யார் 'சட்டை' செய்கிறார்கள்!

அந்த மனித மந்தை அவனை எப்படி பயமுறுத்திவிட்டது!

இந்தப் பூலோகத்திலிருப்பதைவிட, நாமெல்லாம் கூண்டோடு 'நம்ம லோகம்' போய்விட வேண்டியதுதானே! இந்தியாவில்மட்டுந்தான், 'நம்பவர்' இன்னமும் இருக்கிறார்கள் — வெளியுலகில் எவ்வளவோ கடவுள் குடும்பங்கள், ஊரைவிட்டே ஓடிவிட்டன-சிலநாடு கடத்தப்பட்டன அவைகளெல்லாம் மாஜிகளாகி விட்டன.

தார், ஓடின் போன்ற தெய்வங்கள் எங்குபோய் மறைந்தன என்றே தெரியவில்லை. ஆனால் இந்த மட்டும் மாரி, காளி, திரிசூலி, முத்தாலுராவுத்தன், முனியன், சங்கிலிகருப்பன் வரையில் ஒருவர் கூட விடாமல வாழ்கிறார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் நான் மனித உலகை விட்டே போய்விடுவதென்ற முடிவிற்கே வந்து விட்டேன்.

எனக்கு கொடுத்தவேலை, ஊரை நோயால் வாட்டல்—இதைச் செய்யும் என்னையும் இந்த மக்கள் விட்டு வைத்திருக்கிறார்கள்! ஆனால், அதிக நாள் நீடிக்க முடியாது.

அம்மை பரவுகிறது என்றாலே, 'ஊசி போட' வந்து விடுகிறார்கள் இப்பொழுது-என் சக்திக்கு எங்கே மதிப்பு! என் பக்திமான்களுக்கு, புத்திதான் இல்லை என்றால் தைரியமும் இல்லை. என்னை நம்புவது போல, அவர்களை எதிர்க்கிறார்களா என்றால் இல்லை. ஓடி ஒளிந்து விடுகிறார்கள். நான் என்ன செய்யட்டும்? நான் போய்விடுகிறேன், எங்கள் லோகத்திற்கு!

எனக்கு ஆடு வெட்டுகிறான்களாம் என்ன கோரம்! இதைத் தடுத்தவர்களெல்லாம் எனக்கு விரோதிகளாம் என்ன மதியீனம்! இப்பொழுதே, இந்த கோயில் கர்த்தா, கோணங்கிப்பிள்ளையைக் கேட்கிறேன்......

படுத்திருந்த பூசாரி, போகலிங்கம் திடுக்கிட்டு எழுந்தான். ஏதோ, கோயிலுக்குள்ளே முணுமுணுப்பு சத்தம் கேட்கிறதே என்று! மந்தைவெளி அம்மன், தனக்குத்தானே பேசியபடி வெளியில் வருவதைக் கண்டு திடுக்கிட்டேன்.

"தாயே"

"தடுத்தான், ஆபத்து—விலகடா, வீணா......"

"எங்கே, அம்மையே......"

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 18—3—51 [காஞ்சி

விவேகக் குறைவு!

சமையல் வேலையும் நானே தான் செய்வேன் — பந்தல் அமைப்பையும் நானே கவனிக்கப் போகிறேன்—அலங்காரம் செய்வது எனக்குத்தான் தெரியும் — நீட்டிக்கொண்டே போவானேன்? விருந்திற்கான எல்லா வகையான காரியங்களையும் நானே தான் செய்வேன்.

அவள் அப்படித்தான் பேசினாள், ஆரம்பத்தில்! முதலில் தானே எல்லாவற்றையும் செய்து முடித்துவிட முடியும் என்று நம்பினாள்–அதனால் அப்படிப் பேசினாள்.

அவளேதான் பிறகு 'முகாரி' பாடினாள்.

எல்லாம் என் புத்தி கெட்டத்தனம் - அவசரத்தில் நான போட்ட திட்டம் — விஷயந் தெரியாமல் நான் நடந்து கொண்ட போக்கு - விருந்து, விஷமாயிற்று - சமையல் சரியில்லை. பந்தல் பாதியிலே முறிந்து விழுந்தது—எல்லாம் குழப்பத்தில் முடிந்தது.

வீம்பு பேசிய அவளேதான் பிறகு இப்படிப் பேசினாள்

தன்னால் எல்லாம் முடியும், யாரையும் கூப்பிடவேண்டாம் என்று கணவனிடம் கூறிவிட்டு, எல்லா விருந்தினரும் வந்து அமர்ந்த பிறகு அவமானமடைந்தாள் அவள் கணவன் சீறினவுடன் அவளே எல்லாம் தன் மதியீனம் என்று புலம்பினாள்.

* * *

விவேகக் குறைவாம்! விளக்கமில்லாத திட்டமாம்! பொருத்தமில்லாத போக்காம்!

உணவு நெருக்கடியைப் பற்றி, கேட்டபொழுது, பண்டித நேரு இப்படிக் குறிப்பிட்டார்.

உணவு விஷயத்தில் ஏற்படும் சங்கடங்களுக்குக் காரணங்கள் — இவையாகவும் இருக்கலாம் என்கிறார் நேரு.

அவர் கூறி, நாம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மைகளா, இவை - காடறிந்த 'இரகசியங்கள்' அல்லவோ, இவை!

அவர்கள் விவேகத்தோடு ஆள்கிறார்கள் என்று யார் குறிப்பிட்டார்கள்–இப்பொழுதுதான், கொஞ்சம் குறைவு என்று கூறுகிறார்—அவர்கள் விவேகத்தோடு ஆண்டிருந்தால், வேதனை விரண்டோடியிருக்கும் — துயரம் துரத்தியடிக்கப்பட்டிருக்கும்!

விவேகமில்லாதது மட்டுமல்ல, விபரீதமாக அல்லவா ஆள்கிறார்கள் —திட்டம் தீட்டுகிறார்கள்—சட்டம் செய்கிறார்கள் — மக்களை வாட்டுகிறார்கள்.

அதனால்தான் வேதனை விரிந்து கொண்டே போகிறது - விபரீதம் பெருகிக்கொண்டேயிருக்கிறது.

விவேகக் குறைவு ஏற்பட்டது என்று பண்டித நேரு சொல்கிறார். விவேகம் குறைந்தால் அந்நிலையில் தீட்டும் திட்டங்களில் விளக்கமிருக்காது—மேற்கொள்ளும் போக்கும் சரியாயமையாது!

உணவு விஷயத்திலே மட்டும், நேரு குறிப்பிட்டார் எந்த விஷயத்திலேதான், விவேகத்துடன் இந்த ஆட்சியாளர் நடந்துகொண்டார்கள் என்று நமக்குப் புலப்படவில்லை.

உணவு நெருக்கடியாகத் தாக்குவதால், அந்தப் பகுதியிலே நடந்த விவேகக் குறைவான செயல்களை ஒப்புக் கொள்கிறார். அதுபோல ஒவ்வொரு பகுதியையும் அலசினால் அம்பலமாகும்!

உணவு நிலைமை மிக மோசமான சீர்கேடடைந்த பொழுது, இவர்கள் வெளிநாட்டு உணவுப் பொருள்களை வரவழைப்பதில்லை என்று வீரம் பேசியபடியிருந்தனர் — இது விவேகக் குறைவு என்பதா, விபரீத காலப்புத்தி என்பதா, என்று புரியவில்லை

வீம்புக்குவரிந்து கட்டிக்கொண்டு எல்லாகாரியங்களையும் தன் தலையிலே போட்டுக்கொண்ட, "சிரஞ்சீவி லட்சுமி" விருந்து விபரீதமானவுடன் புலம்புவதுபோல, நேரு பேசுகிறார்–பெண் போல புலம்புவது பிரதமருக்கு அழகல்ல!

விவேகக்குறைவுதான் என்று ஒப்புக்கொண்டால் மட்டும், மக்களின் பசி மறைந்துவிடுமா? 'எல்லாம் என் புத்தி கெட்டத்தனம்' என்று கூறிடும் மனைவியைக்கண்டு, சீறிடும் கணவன் அடங்கிவிடுவானா — ஆத்திரப்படுவானா?

பசியால் மக்கள் துடித்திடும் பொழுது சொல்கிறார் விவேகக் குறைவென்று! இந்த விவேகக் குறைவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல — இவர்கள் ஆட்சியிலே அமர்ந்த அன்றே, 'விவேகக்குறைவு' முடிசூடிக்கொண்டதென்று தானே அர்த்தம்—சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டியதில்லையே!

அவர்களுக்குத்தான் அடிக்கடி 'விவேகக்குறைவு' வந்துவிடுகிறதென்றால், விவேகிகள் கூறுவதை யாவது கேட்கிறார்களா என்றால், கேட்பதில்லை.

சுயமாகவும் செய்யத்தெரியவில்லை —சொல்வார்தம் நல்லுரையைக் கேட்பதுமில்லை.

பண்டித நேரு, விவேகக் குறையிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்—ஆனால், அந்தக் குறையை நிரப்புவது எப்படியென்று கூறவில்லை.

உணவு விஷயத்திலேதான் விவேகக்குறைவு என்று விட்டுவிடுவதற்கில்லை தொட்டதெல்லாம், அந்த 'பஞ்சம்' வந்து தொல்லை தருகிறது.

வெளிநாட்டுக் கொள்கையில் அமெரிக்காவுடன் கொஞ்சிக்குலாவும் வகை அறிவுள்ளோர் எவரும் ஆதரிக்கமாட்டார்கள். பாம்புக்கு முதுகைக் காட்டும் போக்கிலே, பாராள்வோர் நடந்துகொள்கின்றனர்—இது அறிவுக் குறைவின் விளைவென்பதை யாரும் மறுக்கமுடியாது!

காஷ்மீர் பிரச்சினை இவ்வளவு வளர்ந்ததற்குக் காரணம், விவேகக் குறைவு தவிர வேறென்ன காரணமாயிருக்கமுடியும்! அறிவுப் பாதையில் நடந்து, அதனைத் தீர்ப்பதென்றால், இந்தக் குழப்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் இடமில்லை. அறிவு குறைந்தது — ஆகவே, அனர்த்தங்கள் நிறைந்துவிட்டன!

தொழிலாளிகள், அங்கங்கே அறப்போர்கள் செய்கின்றனர்—விவேகத்தோடு வேலை செய்தால், நல்ல பஞ்சத்தை ஓட்டமுடியாதா, ஓட்டக் கூடாத ஒன்றா — இல்லை. ஆனால்

விவேகம் குறைகிறது — விபரீதம் வளர்கிறது!

இரயில்வே, நிர்வாகம், இவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் ஓரே விபத்துக்கிடையிலே சிக்கித்தவித்தது — நான்கு மாதங்களில் நடந்த விபத்துக்களை கணக்கிட்டு ஒரு நாளைக்கு 5½ விபத்து என்று கணக்கிடும்படி விபத்து மயமாகிவிட்டது. இதனை சரி செய்ய முடியாமல் முதலில் யார் யார்மீது பழி சுமத்தினர்கள்! விவேகிகள் செயலா அது.

கல்வித்திட்டம், இவர்கள் கையில் 'குரங்குகை பூமாலை'யாகிவிட்டது!

மருத்துவம், ஏதோ, ஒரு மாது சிரோன்மணியும் எங்கள் மந்திரி சபையிலே உண்டு என்று காட்டுவதற்குரிய இடமாக மாறிவிட்டது.

தொழிலாளர் நலன் 'உபதேசபுரி'யாகிவிட்டது.

தொழிலாளர்கள் குமுறி எழுந்தால் "காலட்சேபம்" நடத்துகிறார்கள்.

சட்டம், அவர்கள் மனமசைந்தபடி செய்கிறார்கள்-அதற்கு நாவசைகிற போக்கில் விளக்கந் தருகிறார்கள்.

பேசியதை மறந்துவிட்டார்கள் — அதற்கு நேர்விரோதமாக நடக்கிறார்கள்.

தடையை நம்புகிறார்கள்—அடக்குமுறையே, அவர்கள் போற்றி வணங்கும் 'தெய்வமாகி' விட்டது! சிறை, தண்டனை, வழக்கு — இவைகளே, அவர்கள் நாளும் நாட்டுக்குச் செய்யும் தொண்டாகக் கருதுகிறார்கள்.

இவைகளையெல்லாம், பார்க்கும்பொழுது, அவர்கள் விவேகத்தோடு நடந்துகொள்கிறார்கள் என்று யார் கூறமுடியும்! எவரும், அவர்கள் அறிவுடன் ஆட்சி புரிகிறார்கள் என்று சொல்லமுடியாது. இருந்தாலும் பண்டிதநேரு, விவேகக் குறைவு என்கிறார்.

விவேகக் குறைவு என்று மட்டுமல்ல, விவேகத்தோடேயே ஆளவில்லையென்று கூறத் தோன்றுகிறது—அவர்களின் ஆட்சி அலங்கோலத்தைக் காணும்பொழுது!

விவேகக் குறைவு என்று கூறுகிற பண்டிதநேரு, உணர்ந்திருக்கிறார்; அதனால்தான் அவர்கள் போடுகிற திட்டங்களெல்லாம் வீணாகின்றன என்பதையும்! ஆகவேதான் மக்கள் அவதியடைகிறார்கள், ஆறாத் துயரில் மாட்டித் தவிக்கிறார்கள்

பண்டித நேரு ஒப்புக்கொள்கிற உண்மையை, நாம் கூறினால் மட்டும் கோபம் வருகிறது — ஆத்திரமடைகிறார்கள்!

நான்காண்டு அனுபவத்தில் அவர்கள் அறிவுக் குறைவின்றி எதில் நடந்துகொண்டார்கள் என்பது புரியவில்லை.

அறிவோடு காரியமாற்றியிருந்தால் இந்த அவலம் ஏன் ஏற்படப்போகிறது?

நேரு, உணவு விஷயத்தில் மட்டும், அறிவுக் குறைவோடு நடந்ததால், ஏற்ற திட்டங்கள் தீட்டாததால், அனர்த்தங்கள் விளைந்துவிட்டன என்கிறார். அது தவறு — எல்லா விஷயத்திலும், எப்பொழுதும் 'அறிவுக் குறைவு' ஆதிக்கம் செலுத்தியதால்தான், இன்றைய துயர நிலை நமக்கிருக்கிறது.

அறிவுக் குறைவுதான் — என்று கூறும்பொழுதே அவருக்குத் தெரியவேண்டும், அறிவுக் குறைவானவர்கள் ஏன் ஆட்சி செலுத்தவேண்டும் என்று மக்கள் கேட்க எத்தனை நாட்களாகும்? என்று. 'விவேகக் குறைவு'ள்ளவர்கள் வீணாக மக்களை ஏன் வாட்டவேண்டும்?

ஆளவும் ஆசை!—அந்த நேரத்தில் அறிவுக் குறைவு!!

என் செய்வது? இதனை பண்டித நேரு புரிந்துகொண்டுள்ளார்—அவருக்கு பாராட்டுக் கூறுவோர் பலரும் தெரிந்துகொள்ளாமல் கர்ஜித்து சீறுகிறார்கள்.

தாங்கள் எடுத்துக்கொண்ட காரியங்கள் அத்தனையும் வீணாவதைக் கண்ட பிரதமர், விவேகக் குறைவு என்கிறார் இன்று! — விருந்து நடத்தி முடித்துவிடுவேன் என்று கூறி, நடத்தமுடியாத பொழுது, 'எல்லாம் என் புத்தியில்லாத்தனந்தான்' என்று கூறிய பெண்ணைப் போல!

அக்கம்பக்கத்தாரை அழைத்தாவது, ஒத்துழைக்கச் செய்து, விருந்தை முடித்திருந்தால், கணவன் பாராட்டியிருப்பான்—ஆனால் அதை அவன் செய்யும்படி சொன்னபொழுதே கடிந்தாள்-இப்பொழுது புலம்புகிறாள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுதே, நமக்குத் தெரியும், விவேகம் விலகுகிறது, விபரீதம் அரியாசனம் ஏறுகிறது என்று! அப்பொழுது நாம் கூறியபொழுது ஒப்பவில்லை — உண்மையைக் கூறிய நம்மைக் கண்டித்தனர். இப்பொழுது நேருவே ஒப்புக்கொள்கிறார்.

விவேகக் குறைவுதான் என்று கூறிக்கொண்டு, இன்னமும் ஆட்சிபீடத்திலிருந்துகொண்டு, மக்களை மடியவைப்பது விவேகக் குறைவான காரியம்—ஆகவே அவர்கள் அதனை உணரவேண்டும்.

★

ஆந்திரத்தில்!
மலையாளத்தில்!!

தஞ்சை மாநாட்டில் நமது இலட்சியப் பாதையிலே புதியதொரு ஒளி வீசியதைக் கண்டோம் — மகிழ்ந்தோம்! திராவிடத்தின் ஒரு பகுதியான தமிழகத்தில் மட்டும் பேசினால் போதுமா என்று சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்கு தக்க பதில் தருகிறோம்--இது ஏற்ற நேரமில்லை, நமக்கு அத்தகைய வசதியும் வாய்ப்பும் வந்துவிடவில்லையென்று—அவர்கள் வாய் ஓய்வதில்லை.

மலையாளத்திலும், ஆந்திரத்திலும் நமது எண்ணம் நுழையப் போகிறதென்பது திண்ணம். அதன் அறிகுறிகள் அப்பப்பொழுது தெரியாமலும் இல்லை.

தஞ்சை மாநாட்டில் ஆந்திரத் தோழர் கே. கோடீஸ்வரராவ் தெலுங்கில், மிக அழகாக திராவிட நாட்டுக் கோரிக்கையை எடுத்து விளக்கினர்.

அதுபோலவே, நாகர்கோவில் தோழர் கே. மனோகரன், மலையாளத்தில், நமது இயக்க இலட்சியங்களை எடுத்துரைத்தார்.

இந்த தெலுங்கு, மலையாளச் சொற்பொழிவுகள், நம் இதயத்திற்கு இதந்தருகின்றன-எதிர்காலத்தில் நாம செய்யப்போகும் திட்டத்திற்கு வலுவூட்டுவதுடன், நமக்கு நல்ல நம்பிக்கை தருகின்றன.

———

9-ம் பக்கத் தொடர்ச்சி

"ஊர்ப்பயணம் சொல்லிக் கொள்ள......"

"யாரிடம்?"

"கோணங்கிப் பிள்ளையிடம்..."

மந்தை வெளியம்மன் நடந்து விட்டாள். பூசாரி கால் வெடவெடென நடுங்க, அவள் போனதிசையிலே அடியெடுத்துவைக்க முயற்சி செய்ய, முடியவில்லை. ஆகவே அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

x x x

"அடே, பரமபாதகா, படுபாவி-நீ என் பக்தனா" சீறினாள் அம்மன்.

"தேவி, உனக்கு ஒரு குறையும் செய்யவில்லையே!" என்றார் கோணங்கி.

"ஆடு வெட்டுவது தவறு என்று நான் சொன்னேன்"-என்றாள் தேவி.

"அந்தப் பயல்களோடு நீங்க சேரப்படாது—அதனால்தான் நீங்க சொல்லியும் நாலு ஆடுகளாக வெட்டி விட்டேன்."

"கொலைகாரா!"

"காவு கொடுத்தேன் – கொலை செய்யலீங்களே"

"அது மட்டுமா? பொய் சொல்லியிருக்கிறாய் — இல்லை, இதற்கு மேலே, எனக்கு சக்தியில்லையென்று ஊராருக்குச் சொல்லிவிட்டாய்!"

"எபபடி?"

"என் கோயிலிலிருந்து என் சிலையைப் பண்ணையாளை விட்டுத் தூக்கிக்கொண்டு போனாய்!"

"அட, அதுவா? அந்தக் காலிப் பயல்களைப் போலீசிலே சிக்கவைக்க"

"என்னை ஒரு பொம்மையென்று நினைத்துக்கொண்டு பொய்ச் சொன்னாய்!"

"இல்......லீ......"

"எனக்கு சக்தியிருக்கிறதென்றால் என்னிடமல்லவா சொல்லியிருப்பாய்--போலீசுக்குப்போய், பொய் வழக்கு கொடுத்திருக்கமாட்டாயே!"

"அப்படியில்லை தாயே--அக்கிரமக்கார பசங்களைத் தண்டிக்க வேண்டாமா?"

"தண்டிக்க நீ யார்? அம்மன் நானிருக்க, மனிதன் நீ எப்படி முயற்சி செய்தாய்? அதுவும் அவன் தப்பு செய்யவில்லையே-நல்லதைத் தான் சொன்னான்"

"உங்களுக்கு பலிகொடுக்கக்கூடாதென்று........."

"எனக்கு பழிவரக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் சொன்னான்—தடுத்தான்!"

கோணங்கிப் பிள்ளை தலை சுழல ஆரம்பித்துவிட்டது. அவருக்கு எதுவும் புரியவில்லை.

"கோணங்கி, உன் போன்ற கோணங்கி பக்தர்களால் எங்கள் மானம் காற்றிலே பறக்க விடப்படுகிறது-இனி நாங்கள் இங்கு இருக்க முடியாத அளவு நிலைமை வந்து விட்டது. எலலாம் பக்தர்கள் என்ற பெயரால் உலவும் உங்கள் செயலகளால்—அவர்களால் அல்ல! ஆகவே நான் போகிறேன். இனி பந்தை வெளியிருக்கும் — அங்கு, உங்கள் மனித மந்தைதான் கூடிக் கும்மாளம் போடவேண்டும். அம்மன் இருக்கமாட்டாள்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்!......

கோணங்கிப் பிள்ளை கண் விழித்துப் பார்த்தார். இத்தனைக் காட்சிகளும் கனவில் கண்டவை என்று அப்பொழுதுதான் புரிந்துகொண்டார்.

எதிரில், எவருக்கும் தெரியாமல், எடுத்துவந்த அம்மன் சிலையிருந்தது—அது அவரைப் பார்த்துக் கேலியாக சிரித்தது.

அந்த ஊரிலே பரவிவந்த பகுத்தறிவுப் பிரச்சாரத்தைத் தடுக்க அவரிட்ட சதித் திட்டம்-பகுத்தறிவியக்கத்தைச் சேர்ந்தோர்மீது கோயில் சிலையைக் களவாடினார்கள் என்று வழக்குக் கொடுத்துவிடலாம் என்பது-பண்ணையாளை பகுத்தறிவியக்க மாமசிவமும், பார்த்திபனும் திருடியதாக ஊரிலே கூறவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்—பூசாரி போகலிங்கத்திற்கும் அதே உத்தரவு - ஆனால் பொழுது விடிவதற்குள்ளே சிலையைத் தூக்கிப் போன பண்ணையாளே, உண்மையை ஊர் முழுவதும் சொல்லிவிட்டான்.

கனவிலே கண்ட காட்சியின் நினைப்பு முடிவதற்குள்ளே, ஊர் மக்களின் கூட்டம் வீட்டு எதிரில் கூடியிருப்பதைக் கண்டார்—கலங்கினார்—அவருக்கு இப்பொழுது பயம் வந்ததற்கு காரணம், கூடியிருப்பது மனித மந்தையல்ல, மக்கள் மன்றம் என்பது தெரியும்!

—X—

வாணியம்பாடி
மாணவர் மாநாடு

வாணியம்பாடி, நகராண்மைக் கழகப் பணிமனைக்கு எதிரில் அமைந்திருந்த பந்தலில், வடார்க்காடு மாவட்ட திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல மாநாடு, 24—2—51 காலை 11-மணிக்கு கூடிற்று. மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் மாணவத் தோழர்களும், மற்றும் இயக்க அன்பர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

வரவேற்புக் குழுத் தலைவர் பார்த்தசாரதி எல்லோரையும் வரவேற்றார்.

தோழர் இராம. அரங்கண்ணல் மாநாட்டைத் துவக்கிவைத்து, இன்றைய ஆட்சியாளரின் போக்கு, அதனால் கல்வித் திட்டம் படும்பாடு பற்றி விளக்கிப் பேசினர்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தோழர் பி. ஆர். கோகுல்கிருஷ்ணன் பி. ஏ. அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

மாலையில் தோழர்கள் அறிஞர் கா. அப்பாதுரை, கே. ஏ. மதியழகன் பி. ஏ., தில்லை. வில்லாளன், பி. ஏ. (ஆனர்ஸ்), சி. என். அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

இரவு நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி நடிக்கும் 'ஓர் இரவு' நாடகம் சிறப்பாக நடந்தது.

வருந்துகின்றோம்

நடிகவேள் தோழர் எம். ஆர். ராதாவின் துணைவியார் பிரேமா அம்மையாரும், மகனும் மறைந்து விட்ட செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். பிரிவுத் துயரால் வாடும் தோழருக்கு நம் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

உலகத்தில் மற்றவர்கள், இன்னும் அடையமுடியாத உயர்நீதி முறையில்—மனித வர்க்கத்தில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை நடைமுறையில நிலைநாட்டி வாழ்ந்தோமே! ஆனால் அறிவுக்கும், ஆண்மைக்கும் அடிப்படை திருவிடத்தின் (திராவிடத்தின்) நாகரிகம் என இன்றும் மறுக்கமுடியாத அளவு உலகோர் ஒப்புக்கொண்டபின், நாம் ஏன் இந்த நிலையில் வந்தோம்? ஏன் இந்த நிலையில் தாழ்ந்தோம்?

கொடுமையிலும், வறுமையிலும், குணமும் வழியும் பிறப்பது பொது நீதி ஆயினும் இந்நிலையைக் கொஞ்சம் கூட நம்நாட்டில் காணமுடியவில்லை. வெள்ளையன் இந்நாட்டை ஆண்டகாலத்தில் ஓர் அளவு உலக நாகரீகம் பரிமாறப்பட்ட காரணத்தால், மனித உரிமையின் உணர்ச்சி உள்ளத்தில் ஊடுருவிப் பாய ஏதுவாயிற்று. அதைத்தெளிவாய்உணர்ந்த ஆரியம் இந்துமதத்தின் பெயரால் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பி, தன் வாழ்வினுக்குச் சட்டத்திட்டங்களைக்கட்டுப்படுத்தியது. அதன்படி இந்துமதத்தின் கோட்பாட்டிற்குள் பலவந்தமாக அடக்கப்பட்டவைகளுக்குச் சர்க்கார் நீதியை வழங்கமுடியாதபடி ஒருபுறம் ஏற்பாடும் செய்துகொண்டு, மறுபுறம் வெள்ளையன் ஆட்சி நலனுக்காக ஒன்று சேர்க்கப்பட்ட, மொழியால், நாகரிகத்தால், பண்பாடுகளால், வெட்ப தட்பசதால் வேறுபாடு உடைய பல இனமக்கள் கொண்ட இந்திய உபகண்டத்தையும் அவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ஆளும் வர்க்கத்தின் அரசியல் ஞானமும், உலக நாகரிமும் பல சிந்தனைச் சிற்பிகளையும், விடுதலை வீரர்களையும் படம் பிடித்துக் காட்டியதால் நம்முள்ளத்தில் பகுத்தறிவு பற்றலாயிற்று.

உலகத்தில் விடுதலை அடையும் நாடுகள் எல்லாம் ஏகாதிபத்திய வெறியை உதறித்தள்ளி சமதர்மக் குடியரசு, அமைப்பின்மூலம் கலை, நாகரிக, மொழி, இன விடுதலை அளித்து வருகிறது. பலஇன வேறுபாடு உடைய நம்நாட்டோ எனில்சகல அதிகாரங்களையும் ஆதிக்க வெறி பிடித்த மத்திய சர்க்காரே ஏற்றுக் கொண்டு, மொழிவழி மாகாணங்களைக்கூட அமைக்காமலும், பல நாட்டு மக்களைப் பஞ்சாயத்துச் சர்க்காராக வைத்துக் கைக்கூலிகளாக ஆக்கி வைத்தும் இருக்கிறது. ஆதிக்க வெறிகொண்ட மத்திய ஆட்சியின் அக்கரைக்குப் புறம்பாக ஒரு சிறு சட்டத்தையும் செய்ய முடியாத சீரழிவு நிலை ஏற்படுச் சஞ்சலம் அடையவேண்டி இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு மாற்றம் இல்லாது அதை ஆதரிக்கும் மக்களுடைய மாகாணங்களை மட்டும் செல்லப் பிள்ளைகளாக வளர்க்கும் நிலைக்கும் இதுவே காரணமாகும். அதனாலேதான் சகல வளமும் பொருந்திய திராவிட நாட்டில் சோற்றுக்குப் பஞ்சம் வந்து செத்து மடிய வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

வடநாடு பெரிதும் கோதுமை தின்போருடையதும், தென் நாடு முழுக்க அரிசி உணவு உண்போர் உடையதும் ஆகும். கோதுமைப் பஞ்சம் ஏற்படும்பொழுது அரிசியை அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்தும் கட்டாயப்படுத்தும் நிலை இருக்கிறது. கோதுமைக்குப் பஞ்சம் ஏற்பட்டால் ஆஸ்டிரேலியாவில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும் அவசர அவசரமாகக் கோதுமைத் தருவிக்கும் அதே மத்திய சர்க்கார், அண்டையில் இருக்கும் பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் அரிசி அதிகமாகக் கிடைத்தும் அரிசி தின்னும் நம்மைப் பட்டினி போட்டுக்கொல்ல நினைக்கும் கொடுமைதான் ஏனோ? இதை ஏன் இன்னும் மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரோடு போராடித் தீர்க்கக் கூடாது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வளம் பொருந்திய நம் நாட்டில் ஏன் உணவுப் பஞ்சம் என்று கேட்டால் கடவுள் கோபித்துக்கொண்டு மழை வரவில்லை என்கிறார்கள். இந்த மடமை ஆட்சியிலோ-வாழ்ந்த நாம் விழுந்து கிடப்பது விஞ்ஞான வளர்ச்சியால் மேகங்களை ஒன்று கூட்டி மழையைத் தருவிக்கும் இம் மனித முன்னேற்ற நாகரிக காலத்தின பின்னும், நாம் 'கடவுள் கோபித்துக்கொண்டு மழையை உண்டாக்கவில்லை' என்றும், யாகாதி கருமங்கள் மூலம் எம்பெருமானின் கிருபையை நாடிக் கோபத்தைத் தணித்து மழையைப் பெற வேண்டுமென்றும்' நினைக்கிற நிலையில் இருக்கிறோம். இத்தகைய மடமைக்குப் பலியாக இந்த நாடு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றவரையில் மனிதப்பூண்டு அற்றுபோக வேண்டியதுதான்!

இவர்கள் செயல் எவ்வளவு ஏமாற்றுகலானது என்று எண்ணிப் பாருங்கள். கடவுள் கோபித்துக் கொண்டு மழையை வரவழைக்காது இருந்தால், அதே கடவுளால் படைக்கப்பட்ட 18 கோடி ரஷ்ய மக்களும்; 50 கோடி சீன மக்களும் அந்தக் கடவுளைக் கொஞ்சம் கூட மதிக்காது இருந்தும், ஏன் அவர்கள் பேரில் கோபித்துக் கொள்ளவில்லை? இவர்கள் ஆட்சியில் ஏன் இந்த அலங்கோலம் என்று கேட்டால் "இந்த சர்க்கார் 3 வயது குழந்தைதானே! இதற்குள்ளே இதை எல்லாம் எதிர்பார்க்கலாமா" என்று கூறுகின்றார்கள். இதற்காக இவர்களைப்பற்றி நாம் அனுதாபப்படுகிறோம். அண்டையில் இருக்கின்ற செஞ்சீனா 6 மாதக் குழந்தைதானே; அதன் நடத்தையைப் பார்த்தாவது இவர்கள் புரிந்துகொள்ளக் கூடாதா? 50 கோடி மக்கள் கொண்ட சீனு; சின்னா பின்னப்பட்டுக் கிடக்கும் சீனு—கஞ்சா அபின் மயக்கத்தில் கலங்கிக் கிடந்த சீனு; அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களின்

தி. மு. க. செய்திகள்! வீரர்கள் முழக்கங்கள்!

தாங்கி

வெளிவருவது

மாலைமணி தினசரி

தோழர்கள் ஆதரவே அதன் வளர்ச்சி

"மாலைமணி"

(Ad) முத்துமாரி செட்டித் தெரு, மண்ணடி சென்னை.

ஆணைக்கு அடங்கிக் கிடந்த, ஷியாங்கே ஷேக்கின் சீர்கெட்ட ஆட்சியிலே செத்து மடிந்த சீனா, 6 மாத காலத்தில் உயிர்பெற்று— அறிவுடைய அதன் தலைவன் மா-சே-துங்கின் சீரமைப்பால்தான் தன் மக்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து, உண்டது போக 10 இலட்சம் டன் அரிசியை நமக்குத் தரக் காத்துக்கொண்டு இருக்கிறதே! இதைப்பற்றிஎன்ன சொல்ல முடியும் இந்த சர்க்கார்?

இந்தப் பஞ்சாயத்துச் சர்க்காரால் எப்பொழுது எந்த மக்களுக்குத்தான் நன்மை ஏற்பட்டு இருக்கிறது?

கூலி கேட்கும் தொழிலாளர்கள் தடியடி படுவதும், நேர்மையான வாழ்க்கையில் வாழ விரும்பும் நடுத்தர வகுப்பினர் நசுக்கப்படுவதும்; பெண்டு பிள்ளைகள் மானம் இழக்கப்படுவதும், உரிமை உணர்ச்சி பறிபோவது மட்டுமல்லாமல், பேச்சுரிமை, எழுத்துரிமை கூட்டம் கூடும் உரிமை ஆகியவைகள் பறிக்கப்படுவதும்; உலகத்தில் நாகரீக சர்க்கார் எதுவும் காணாத முறையில் தொட்டதற்கெல்லாம் பாதுகாப்புச் சட்டம் பயன் படுத்தப்படுவதும், சிறையில் கொடுமை இழைக்கப்படுவதும் தவிர வேறு என்ன இவர்கள் ஆட்சியில் மக்கள் அடைந்த பலன்? ஒரு சிறு கொள்ளைக் கூட்டம் பட்டம் பதவிகளிலேயும் கள்ள மார்க்கெட்டின் கொள்ளை லாபங்களிலேயும் மூழ்கி அதிகார வெறி கண் தெரியாமல ஆதிக்க இறுமாப்புக்கொண்டு அடக்கு முறை தலைவிரித்தாடுகிறது. அதனிடையே வடவர் வாழ்வு வளம் பெற, நாம் தாழ்வுறும்படியாக விளைபொருள்களும், உலோகப் பொருள்களும் பயன்படுத்தப் படுகிறது. பெரும் பெரும் தொழிற்சாலைகளும், வியாபாரங்களும் வடநாட்டிலேயே நிலைபெறத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. நாளுக்கு நாள் வடநாட்டுச் சந்தைக் கடையாகத் திராவிட நாடு மாற்றப்பட்டு வருகிறது. வடநாட்டின் எண்ணப்படி கூலிகளும், குமாஸ்தாக்களும் கொடுத்து உதவும் பிரதேசமாகக் கொஞ்ச நாளில் திராவிடம் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. ஆகையினால்தான் திராவிட இனம் நல்வாழ்வு பெற வேண்டுமானால் திராவிடநாடு இந்திய உபகண்ட அரசியல் பிணைப்பில் இருந்து விடுபட்டு ஒரு தனி நாடாக அமைந்தாக வேண்டும். அங்ஙனம் அமைந்தாலன்றி வேறு வழி இல்லை என்று நாம் கருதுகிறோம்.

இது முடியாத வெறும் பொய் வாதம் என்று கூறுகிறார்கள் இன்றைய ஆளவந்தார்கள். நம்மை விட சிறு தொகை கொண்ட இனம், நாடு இவைகள் தனி அரசு புரிவது கண்கூடு. நம் அண்டையில்—அண்மையில் மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிரிந்த பாகிஸ்தான், ஒரு மாகாணமாக இருந்த பர்மா, இலங்கை ஆகியவை தலைநிமிர்ந்து நடப்பதைக் காண்கிறோம். அவைகளைப் பற்றிப் பன்முறை மேடைகளில் விளக்கிக் கூறியும், எழுதியும் வருகிறோம். இவைகள் ஒன்றும் ஆளவந்தார்களுக்கும் அவர் தம் ஆதரவாளர்களுக்கும் விளங்குவதாகத் தோன்றவில்லை. நாம் பலாத்காரத்தில் துளிகூட நம்பிக்கை இல்லாதவர்கள். இந்த நாட்டுச் சூழ்நிலையும் அதற்கு ஏற்றது அல்ல. நமக்கு உள்ள ஒரே ஒரு வழி பட்டி தொட்டிகளில் எல்லாம் பகுத்தறிவுப் பிரசாரத்தின் மூலம் அறிவைப் பெருக்கித் திராவிடத் தனி சமதர்மக் குடி அரசு காண்பதாகும்.

திராவிடநாட்டை வடநாட்டான் சந்தைக்கடையாக மாற்றத் திட்டமிடும் ஆட்சியைத் தங்கள் நலனுக்குப் பயன்படுத்துவோரும், அவர்களுடைய தாசர்களான சில தென்னாட்டாரும் நம்மீது சி[illegible]ய்வதும், நம்மைப் பல வழிகளில் அடக்கப் பார்ப்பதும் எதிர்பார்க்க[illegible]யாகும். எவ்வளவு அடக்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் தன்னலமற்ற இளங்காளைகளின் ஈடும் எடுப்பும் அற்றத் தியாகத் தழும்புகளால் இனி அரசியல், பொருளாதார, சமுதாயக் கிளர்ச்சியும், புரட்சியும் திராவிடத் தனி அரசு அமையும்வரை ஏற்பட்டே தீரும்.

வகுப்பு உரிமைக்கு வஞ்சனை ஏற்பட்டபோதும், வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு முயற்சியை அரசியலார் அடக்கப் பார்க்கும் நிலையிலும், வடநாட்டு ஆதிக்க வெறியர் தென்னாட்டில் காலெடுத்து வைக்கும்பொழுதெல்லாம் மக்களிடையே எழுந்த மன எழுச்சியும், இளங்காளைகளின் தியாக உணர்ச்சியும் நம் உயர் நோக்கத்திற்கும், வீரத்துக்கும் போதிய சான்றாகும்.

திராவிடத் தனி சமதர்மக் குடி அரசு ஏற்பட்டால் மக்கள் உண்ணப் போதுமான உணவும், உடையும் இருப்பிடமும் பெறுவதோடு மட்டும் அல்லாமல், அறிவும் பெருகும். அணுக்குண்டின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டக் கனவு காண்கின்ற அமெரிக்காவைவிட அரிய முறையில். வள்ளுவன் வழியில் உலகம் முழுவதும் நிலைபெற்ற சமாதானம் ஏற்படச் செய்ய முடியும். சண்டையைத் தூண்டிச் சமாதானத்தைக் குலைக்கும் உலக முதலாளி வெறியர்களின் கொட்டம் அடக்கும் முறையிலே, அகில உலகத்திலும் அன்பு, அறிவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உலக சமாதானப் பெரும்படையில் சேரும் வாய்ப்புப் பெறுவோம். $4\frac{1}{2}$ கோடி மக்களின் உயிரைக் கொடுத்தேனும் நம் எதிர்கால மக்கள் திராவிடச் சமதர்மக் குடி அரசில் நல்வாழ்வு பெற்றுத் திகழ எல்லாவித தியாகப் பரிசோதனைக்கும் அஞ்சாமல் ஆணைக்கு எதிர்பார்த்து நிற்போமாக" என்று வீர முழக்கமிட்டார்.

X X X

மாயவரம் — அந்த இருநாட்களும் நமது கருத்தலைகளில் மிதந்தது. கழக முன்னணி வீரர்களின் முரசும், இசைக் கலைஞர்களின் கீதமும் 'சந்திரமோகன்'' "நீதிதேவன் மயக்கம்" காட்சிகளும், இவைகளைக் கேட்கவும் காணவும் திரண்டிருந்த மக்கள் வெள்ளமும், மிகப்பெரிது!

அந்தக்காட்சி — நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால், மக்கள் காட்டும் அன்பை எதிரொலித்தது.

அதை எண்ண எண்ண நம் இதயம் பூரித்தது.

மாநாட்டுச் செயலாளர்கள் குடந்தை தோழர் பராங்குசம் மாயவரம் தோழர் பழனிச்சாமி, இன்முகமும், விளம்பர உழைப்பினர் தோழர் வை. மாணிக்கத்தின் உற்சாகமும், 'வருக! இங்கே செல்க!!' என்று வரிசைப்படுத்திய தொண்டர்படைத் தலைவர்கள் R. முத்துக்குமாரசாமி, R ஜோசப், ஆகியோரின் பரவசமும் 'என்ன வேண்டும்? எது வேண்டும்?,

(16 பக்கம் பார்க்க)

பானி—வாலா

★

மாதம் ரூ 1800 சம்பளம்!

எந்த மந்திரிக்கு என்று கேட்கா தீர்கள். இந்தச் சம்பளத் தொகை, மந்திரிக்கல்ல; பெரிய அதிகாரிக்கு மல்ல; ஆனாலும் மாதம் ரூ 1800, இந்திய சர்க்காரால் ஒரு ஆசாமிக்குத் தரப்பட்டு வருகிறது.

சம்பளம், மட்டுமல்ல;

அலவன்சு வேறு, மாதம் ரூ 500!!

சம்பளம், அலவன்சுத் தொகையெல்லாம், உத்தியோகமில்லாத ஒரு நபருக்குத் தரப்படுகிறதென்றால், ஆச்சரியமடைவீர்கள். ஆமாம், நண்பர்களே, ஆமாம்! மாதா மாதம் இந்த அளவு பெரிய தொகையை மட்டுமல்ல;

தினசரி ரூ 150!!!

வேறு, தருகிறார்கள், இந்திய சர்க்கார். இது எதற்குத் தெரியுமோ? அந்த, ஆசாமிக்கு முதல் வகுப்பு பிரயாண அலவன்சாம் இது!

உத்தியோகமில்லாதவர் என்கிறாய், ஆனாலும் ஊராரும் சர்க்கார் இவ்வளவு பணத்தொகையைத் தருவதாக விபரத்தோடு சொல்கிறாய் இதென்ன வேடிக்கையென்று கேட்பீர்கள்!

வேடிக்கையல்ல நண்பர்களே — இந்த விபரம் நானே தேடிக் கண்டதுமல்ல; நமது மதிப்பிற்குரிய பட்டினி மந்திரி முன்ஷி, கடந்த மார்ச் 5ந் தேதியன்று இந்திய பாராளுமன்றத்திலே, ஒரு கேள்விக்குத் தந்த பதில் மூலம் தந்ததுதான்.

சம்பளம்!

அலவன்சு!!

தினசரிப்படி!!!

இவ்வளவும், உத்தியோகமில்லாத ஒரு ஆசாமிக்கு அளிக்கப்படுகிறது. அதுவும் "பணமென்னும் பிசாசு! மண், பொன், பெண் எல்லாம் தூசு!" என்று பாடிட வேண்டிய யோகிக்கு.

ராஜஸ்தானைச் சேர்ந்த பானிவாலாவுக்குத்தான், இவ்வளவு, சீருஞ் சிறப்பும் எதற்காகத் தெரியுமா?

தண்ணீர் எங்கே கிடைக்கும், எந்த இடத்தில் தோண்டினால் நீரூற்று இருக்கிறது என்பதைச் சொல்கிறாராம், அவர், தனது 'ஞான திருஷ்டி' மூலம்!

விசித்திரமாயிருக்கிறதே — என்பீர்கள், வானத்தைப் பார்த்த வண்ணம் 'மழை வருமோ?' என்று ஏங்கிக் கிடக்கும் நீங்கள்!

ஆனால் காட்டுத்திருவிழா நடத்தியவர்களல்லவா, நமது கனம் முன்ஷியார். இதுபோன்ற சித்துகள் மூலம் சர்க்காரை நடத்த, அவர் திட்டம் தீட்டிக்கொண்டுள்ளார் போலும்!

"இந்த பானிவாலா ஆசாமிக்கு இவ்வளவு செலவழிக்கிறீர்களே? ஏற்பட்ட பிரயோஜனம் என்ன?" என்று ஒருவர், பாராளுமன்றத்திலே படபடப்போடு கேட்டாராம்.

பதில் சொல்லிய முன்ஷியார், "ஏராளமாக உண்டு" என்றாராம்.

"எங்கே? பட்டியல் தருக, மந்திரியாரே!" என்று கேள்வி கேட்டவர், கேட்கவில்லை. கேட்டிருந்தால் எதைக்கூறுவார், அமைச்சர்! எதைதான் காட்டமுடியும்? குழிவிழுந்த கண்களையா, குய்யோமுறையோ என்று குமுறிச்சாகும் பெண்களையா, மயானம் பார்த்த சீமையிலே நான் பாடித்துச் சாகிறேண்டா என்று பாடும் பரிதாப உருவங்களையா, பட்டினி பிம்பங்களையா, எதைக்காட்டுவார்?

பானிவாலா, பிச்சைக்காரனுக்கு யோகம்!

நாம் தரும் வரிப்பணத்தில், கொழுக்கவைக்கிறது, அந்த ஆசாமியை, நேரு சர்க்கார்!!

ஏழைகள் பணம் — இந்த வீண் காரியத்துக்கு!

பகுத்தறிவுக் காலத்தில் பானி வாலாவாம், பானிவாலா!

காங்கிரஸ் நண்பர்களே, நீங்களே எண்ணிப்பாருங்கள் இப்படித்தானா வீணாகவேண்டும், ஏழையின்பணம்! 'ஏகத்தாளம் போடுகிறவன்' ஏய்த்துச்சாப்பிடத்தானா, சுயராஜ்யம் வந்தது!! ஐயோ! இருபதாம் நூற்றாண்டிலா இந்த வெட்கக்கேடு!!

★

அரிய சந்தர்ப்பம்

ரமணியமான இலங்கைத் தீவில் சுமார் 1600 மைல் சுற்றுப் பிரயாணம்

பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் இலங்கைத் தீவு பூராவிலும் பல முக்கிய நகரங்களையும், சரித்திரப் புகழ்பெற்ற இடங்களையும் 15-நாட்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவர சகல ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம்.

மதராஸ் எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து 20—3—51-தேதி புறப்பட்டுச் சென்று திரும்பி 4—4—51-தேதி எழும்பூர் வந்து சேரலாம்.

	2-வது வகுப்பு	3-வது வகுப்பு
நபர் ஒன்றுக்கு டிக்கட் மட்டும்	ரூ. 280	ரூ. 170
நபர் ஒன்றுக்கு சாப்பாடு, டிபன், வைத்திய வசதி உட்பட	ரூ. 350	ரூ. 240

விபரங்களுக்கு உடனே கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.
தங்களுடன் சகல விதத்திலும் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம்

தி நேஷனல் இண்டியா டிராவல் ஏஜன்ஸீஸ்
(இண்டோசிலோன் ரீ)
31, பிடாரியார் கோவில் தெரு, :: மதராஸ் 1.
தந்தி:- "CHANDLER" போன்:- 4676.

காமராஜருக்கல்ல!

'சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் சிலர் போக்கு நன்றாகயில்லை இவர்கள் இனியும் இப்படியே செய்து வருவார்களானால் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்களென்றும் இதனால் அவர்களுடைய வாழ்க்கையே வீணாகிவிடுமாறு செய்யப்படலாமென்றும் எச்சரிக்கிறேன்"

* * *

எச்சரிக்கிறார்!

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்! 'கடுமையாக தண்டிக்கப்படுவர்', என்று எச்சரிக்கிறார்!!

எச்சரிப்பவர் — மந்திரியல்ல. தனக்குக் கீழ்வேலை செய்வோரை அந்தந்த இலாகாத் தலைவர்கள் எச்சரிப்பதைப் பார்த்திருக்கிறோம்.

உத்தியோகஸ்தர்களை வேலை வாங்குவதும், அவர்களுக்கு வேலை கொடுப்பதும், ஒரு சர்க்காருடைய வேலையாகும். ஆனால், இந்த எச்சரிக்கை, விடுத்தவர் சர்க்காரை நடத்தும் மந்திரிப் பொறுப்போ, அரசாங்கமுத்திரையைத் தொடும் அருகதையோ ஏற்ற ஆசாமியல்ல!!

ஒரு கட்சித்தலைவர்.

ஒரு அரசியல் கட்சித் தலைவர், இதுபோல, சர்க்கார் அதிகாரிகளை மிரட்டுகிறார்.

காமராஜ்-கடந்த 5-ந்தேதி வேலூரில் பேசியபோது, இதுபோல, எச்சரித்திருக்கிறார்.

அவர், இந்நாட்டை ஆளும், 'பாக்யம்' பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர்தான்!

ஆனால் காங்கிரஸ் கட்சி என்பது வேறு; சர்க்கார் என்பது வேறு.

சர்க்காரை நடத்துவோர் காங்கிரஸ் மந்திரிகளாயிருக்கலாம். அதனால், சர்க்கார் காங்கிரஸ்காரர்களுடையது மட்டும்தான், என்று கருதப்பட மாட்டாது.

பெரும்பான்மையான வோட்டுகள் பெற்று, ஒரு அரசியல் கட்சியே சர்க்காரை நடத்துகிறதென்றாலும் அதை மக்கள் எல்லோருக்காகவும், ஆளும் சர்க்கார் என்றே கருதுவர் —ஜனநாயகம், அறிந்தோர்.

அந்தக் கருத்தோடேயே, மந்திரிகளாக ஆனோரும், நடந்துகொள்வர் மந்திரிகள் நடந்து கொள்ளவேண்டிய முறை, வகுக்கவேண்டிய திட்டம், ஆகியவைகளில் தலையிடவும், யோசனை கூறவுமான காரியங்களில் தலையிட காங்கிரஸ் கட்சி உரிமை பெற்றதுதான்!

தனது கட்சிச் சர்க்காருக்கான யோசனைகளை, அக்கட்சி கூறுவதை எவரும் மறுக்க முடியாது. எதிர்க்கவும் முடியாது.

அதற்குப் பதில், மந்திரிகளுடைய பேனா, தன் கையிலிருப்பதாக நினைத்துக்கொண்டு, சர்க்காரை நடத்தும் நிர்வாகிகள் விஷயத்தில் தலையிடுவதும், தண்டு தூக்குவேன் என்று அலறுவதும், அநாகரீகமானது—அர்த்தமில்லாதது —ஜனநாயகத்தைக் கேலி செய்வது! சர்வாதிகாரி என்ற மமதையைக் காட்டிக் கொள்வது!!

காமராஜ்—கட்சித் தலைவர்; ஆட்சித் தலைவரல்ல!!

அவர், அரசாங்க உத்தியோகஸ்தர்களை எச்சரிக்கவோ அல்லது 'அவர்கள் இப்படித்தான் நடக்க வேண்டும்' என்று கட்டளை இடவோ, அருகதையில்லாதவர்.

ஆயினும், பாபம், இந்த அடிப்படை கூடத் தெரியவில்லை அவருக்கு!

பரிதாபம் வருகிறது நமக்கு; இத்தனை ஆண்டுகள் பொதுவாழ்விலீடுபட்டும், இந்த நாகரீகத்தை அவர் கற்றுக்கொள்ளவில்லையே யென்பதால்!

மந்திரிகளை ஆட்டுவிப்பவராக அவர் இருக்கலாம்; ஆனால், உத்தியோகஸ்தர்கள் மந்திரிகளல்ல; களிமண் பொம்மைகளல்ல — இஷ்டம் போல் வளைக்கவும் நெளிக்கவும் செய்ய!

உத்தியோகஸ்தர்கள் அன்றாட விவகாரங்களில் தலையிடுவது, அதிலும் 'எச்சரிப்பேன்' என்பது போன்ற வார்த்தைகளோடு தலையிடுவது அழகல்ல; ஜனநாயகத்துக்கு! இதை, வேதனையோடு அறிவுறுத்துகிறோம் — விருதுநகர் காமராஜருக்கல்ல; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு!

*

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஓடோடி உபசரித்த கிட்டப்பா, சாமினாதன், சவுந்தரராசன், ராமானுசம், குருமூர்த்தி, டி. பி. ஆறுமுகம் போன்ற தொண்டர் மணிகளின் அயரா உழைப்பையும் காணக் காண, களிப்புக் கடலில் மிதந்தோம், திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய வீர மணிகளைப் பெற்றிருக்கிறது என்ற குதூகலத்தால்!

தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு தஞ்சை ஒரு அளவுகோல் — எதிரிகளும் கண்டு வியக்கும் அளவு வெற்றிகரமாக மாநாடு நடந்ததென்றால் அதில் வியப்பேதுமில்லை. ஏனெனில் தஞ்சைத் தரணியில் பணியாற்றும் நெஞ்சுரம் மிக்க வீரர்களுக்கு பஞ்சமில்லையே!

எத்தகைய பெரும் பணியாயினும் நிறைவேற்ற எம்மால் இயலும் என செயலால் காட்டும் நமது வெற்றிக் காளைகளை வாழ்த்துகிறோம். வாழ்க! வளர்க!!

—

புதிய நூல்கள்
வெளிவந்துவிட்டன

*

வேகமும் விறு விறுப்பும் நிறைந்த நடையில் படிக்கப் படிக்கத் தெவிட்டா கற்பனைச் சித்திரங்கள்

மூவர்ண முகப்பு! அழகிய பதிப்பு!

கருப்பு முல்லை. (ஜெசிற்பியன்) 0—8—0

சாவின் முத்தம் „ 1—0—0

காதலோ காதல் (ரா. தணலன்) அச்சில்

சிறுவர்களுக்கோர் சிறந்த புத்தகம்

வீரபாண்டியன் (நீலமேகன்) அச்சில் 0—3—0

விற்பனை கழிவு 25% செலவு இனம்

விவரங்கட்கு:—

கோவை பாரி நிலையம்

12/21.9, ஒப்பண்ணக்கார தெரு,

(Ad) கோயமுத்தூர்.

சென்னையில் மாகாண மாநாடு

ஜூலையில் நடத்த முடிவு

காஞ்சியில் பொதுக்குழு

காஞ்சியில், 11-3-51 காலை 10-30 மணிக்கு, 'திராவிட நாடு' நிலையத்தில் தி. மு. க. பொதுக்குழு கூடிற்று.

பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் விவரம்:- துறையூர் அழகமுத்து, சி. வி. எம். அண்ணாமலை, சி. என். அண்ணாதுரை, அரங்கண்ணல், சி. டி. டி. அரசு, டி. ஆவுடையப்பன், எம். அய்யாச்சாமி, எஸ். அப்பாவு, எஸ். பாலசுந்தரம், எஸ். பூபாலன், டி. கே. சின்னத்துரை, சி. பி. சிற்றரசு, ஏ. பி. தர்மலிங்கம், என். தர்மாம்பாள், கே. வி. துரைசாமி, மா. இளஞ்செழியன், என். எஸ். இளங்கோ, ஈழத்தடிகள், டாக்டர் கணேசன், சி.வி. கோபால், சென்னை கே. கோவிந்தசாமி, ஹாஜா ஷரீப், இரெ. இளம்வழுதி, காஞ்சி - கல்யாணசுந்தரம், கண்ணபிரான், ஏ. எல். வி. கிருஷ்ணசாமி, குமாரப. தணிகாசலம், ரா. குட்டி, காஞ்சி மணிமொழியார், கே.ஏ. மதியழகன், எம். எஸ். எம். மொய்தீன், சி. முனுசாமி, டி. எம். பார்த்தசாரதி, அரு-பெரியண்ணன், ராஜா சோழகர், சி. வி. ராஜன். கே. எஸ். ராஜமான், எஸ். ஏ. ராஜமாணிக்கம், மா. நா. இராசமாணிக்கம், கேரபி ஜி. என். ராஜு, ஏ. எஸ். ராமன், டி. என். ராமன், ஏ. இராமாமிர்தம்மையார், ராம-சுப்பையா, என். முத்து, எஸ், முத்து, டி. வி. நாராயணசாமி, மன்னார்குடி நாராயணசாமி, தூத்துக்குடி எஸ். நடராசன், என். வி. நடராசன், திருப்பத்தூர் எம். நடேசன், இரா. நெடுஞ்செழியன், கே. கே. நீலமேகம், எஸ். நீதிமாணிக்கம், சி. பஞ்சாட்சரம், எம். ஆர். பாண்டியன்; பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, பாப்பையன், ஜி. பாலசுந்தரம், பிரேமசாமி, என். சாம்பசிவம், குறிஞ்சிப்பாடி சாம்பசிவம் ஈ. வே. கி சம்பத், எஸ். ஆர். சந்தானம், சி. எஸ் சஞ்சீவி, ஏ. எல். ஸி. சஞ்சீவி, சத்தியவாணிமுத்தம்மையார், ஏ சித்தையன், புதுவை-சிவப்பிரகாசம், டி. என் சிவசங்கரன், எம். எஸ். சிவசாமி, சௌரிராசன், போளூர் சுப்பிரமணியன், ஏ கே. சாமி மங்களக்குறிச்சி சோமசுந்தரம், தங்கப்பழம், எம். பி. வடிவேலு, ஈ. வே. அ. வள்ளிமுத்து, என். கே. பி. வேல், ஏ. கே. வேலன், புலவர் கோவிந்தன் வி. எம். ஜான், எம். எஸ். மணி, வி. முனுசாமி, முருகு — சுப்பிரமணியன் ஆகியோர். இன்னும் தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்தும், இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர்.

காலையில், பொதுச் செயலாளர் சி. என். ஏ. இயக்கத்தின் வளர்ச்சி குறித்தும், இயக்கத்தோரின் இன்றைய பணி குறித்தும், எதிர்கால ஆக்கவேலை குறித்தும், மாகாண மாநாடு பற்றியும் நீண்ட நேரம் விளக்கிப் பேசினார்.

இத்துடன் காலை நிகழ்ச்சி முடிந்து, மதியம் உணவிற்குப் பிறகு, பொதுக்குழு மீண்டும் கூடி, பல தீர்மானங்களைப்பற்றி விவாதிக்கப்பட்டது. இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:—

(1) சேலம் கல்லூரித் தலைவர் பேராசிரியர் இராமசாமி, வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி, சென்னை வி. டி. பெரியசாமி, மறைமலையடிகள், சி. ஆர். ரெட்டி ஆகியோர் மறைவு குறித்து தனது ஆழ்ந்த அனுதாபத்தை இப்பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது.

(2) சட்ட திட்டங்களைப் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்து, அவர்களின் கருத்தை அறிந்து மாகாண மாநாட்டுக்கு முன் பொதுக்குழு கூடி, சட்ட திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவுசெய்யவேண்டியது.

(3) தி. மு. கழகத் தீர்மானப்படி வடநாட்டு மந்திரிகளுக்

நெசவாளர் தலைவர்மீது நடவடிக்கை

சேலம் கைத்தறி நெசவாளருக்காகப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகச் செயல்வீரர் எ. சித்தையன், கே கே. பூர்ணையா ஆகியோரையும் அவர்தம் பொதுத் தொண்டையும் நாடு அறியும்.

சேலம் நெசவாளர்களுக்காகப் போராடும் செயல் கமிட்டியையும், அதன் உறுப்பினர்களான டி. கே. வரதராசலு, கே. பி. சிவராமன், ஆர். பி. நடராசன், கே. என். திருமலையா, கே. வி. குப்புசாமி ஆகியோரை அறியாத சேலத்து மக்கள் இலையாது.

பொதுமக்களின் மத்தியில், அவர்கள் நம்பிக்கையைப் பெற்று உலவும் அத்தகைய செயல் வீரர்கள்மீது சர்க்கார் பாய்ந்திருக்கிறது!

இ. பு. கோ. 112-வது பிரிவின்கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம்.

அவர்கள் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களாம்!— கூறி, வழக்குப் போட்டிருக்கிறது சர்க்கார்.

பொதுப் பணிக்கான 'பரிசு' போலும் இது!

குக் கருப்புக் கொடி காட்டி, தடியடி, சிறைவாசம் ஆகிய அடக்குமுறைக்கு ஆளான தோழர்களையும் இந்தப் பொதுக் குழு பாராட்டுவதுடன், அவர்களின் அரிய தொண்டுக்காக தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) பேச்சுரிமையை நிலைநாட்ட தி. மு. கழகத் தீர்மானத்தின்படி தடையுத்திரவை மீறி, சிறைப்பட்டும், தடியடி துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய கொடுமைக்காளாகியும் கஷ்டநஷ்டமேற்ற தோழர்களை இந்தப் பொதுக் குழு பாராட்டுவதுடன், அவர்களுக்கு நன்றிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

(இ) 'ஆரிய மாயை' ஏட்டைப்படித்து, பேச்சுரிமையை நிலைநாட்டிய வடார்க்காடு மாவட்ட அறப்போர் வீரர்களை இப்பொதுக் குழு பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

(3) மாகாண மாநாட்டை சென்னையில் ஜூலை மாதத்தில் நடத்துவதென்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(ஆ) மாகாண மாநாட்டு வரவேற்புக் குழுவாக இப்பொதுக் குழுவையே அமைத்துக்கொள்வது என்று இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

(இ) மாகாண மாநாட்டுக்காக, மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 2000 வசூலித்து, மே மாதம் ரூ. 1000மும், ஜூன் மாத துவக்கத்தில் ரூ. 1000மும், பொதுச்செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்று பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(ஈ) மாநாட்டு அமைப்பு வேலைகளை தி மு. கழக செயற்குழு கவனித்துக்கொள்வது என்றும், மேற்படி செயற்குழு, மாநாட்டு வேலைகளுக்காக உட்குழுக்களை அமைத்துக் கொள்ள அனுமதிப்பது என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(4) தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் முனையில், தி. மு. க. அதிக அளவில் பணியாற்ற ஒரு திட்டம் தயாரிக்க மூவர் கொண்ட கமிட்டியை அமைத்து, அடுத்த பொதுக் குழு கூடுமுன் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, அதற்கு சத்தியவாணிமுத்தம்மையார், ஏ. கே. சாமி என். வி. நடராசன் ஆகியோரைக்கொண்ட கமிட்டியை நியமிக்கிறது.

(5) திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகள் எதுவாயினும், நடைபெறும் நகர தி. மு. க. அனுமதியின்பேரிலேயே நடத்தப்பட வேண்டும் என்பதோடு, அத்தகைய அனுமதிபெற்ற நிகழ்ச்சிகளில்மட்டுமே தி. மு. க. பேச்சாளர்கள் கலந்துகொள்ளவேண்டும்.

(ஆ) தி. மு. க. கிளைக் கழகத்தின் செயலாளரின் கையொப்பத்தோடு வரும் செய்திகளையே இயக்கப் பத்திரிகைகள் வெளியிடவேண்டும்.

(6) தி. மு. க. செயலாளர்கள் ஊரில் நடைபெறும் எல்லா அரசியல் கட்சி நடவடிக்கைகளையும் கவனித்து குறிப்பு வைத்துக்கொண்டு, கழகக் கூட்டங்கள் நடைபெறும் பொழுது, பேச்சாளர்களிடம் காட்டுவதுடன், மத்திய கழகத்திற்கு அவ்வப்பொழுது அனுப்ப வேண்டும்

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், பொதுச் செயலாளர் வந்திருந்த உறுப்பினர்களுக்கு நன்றி கூறினார்.

நன்றி வணக்கம்

1-3-51 அன்று நடைபெற்ற எழுத்துரிமைப் போரை வெற்றிகரமாக நடத்தித் தந்த கிளைக் கழகங்களுக்கும், செயல் வீரர்களுக்கும், அறப்போரில் பங்குகொண்ட அருமைத் தொண்டர் சீயங்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைக் குவிக்கிறேன்.

மேற்படி எழுத்துரிமைப் போரை ஊக்குவித்தும் பாராட்டியும் கடிதங்களனுப்பிய பிற மாவட்டக் கழகங்களுக்கும் எனது அன்பைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வளர்க உரிமை வேட்கை!

அன்பன்,
போளூர் சுப்பிரமணியன்
செயலாளர்.
வ. ஆ. மா. தி. மு. க.

✻ முதலாளித்துவத்தை வேருடன் களைந்து வீழ்த்தி,
✻ ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அடக்கி,
✻ மதப்பித்தர்களின் மடமையை ஒழித்துச்
✻ சுரண்டலற்ற சமுதாய அமைப்பை நிறுவி,

மக்கள் இன்பமாக வாழ வழி வகுக்கும் கீழ்க்காணும் நூல்களை வாங்கிப் படியுங்கள்.

1.	முதலாளித்துவர் ஒழிக!	0	12	0
2.	ஏழையின் அரசியல்	0	8	0
3.	கார்ல் மார்க்ஸ்	0	12	0
4.	பெரியாரும், கலைஞரும், அண்ணாவும் (3-ம் பதிப்பு)	0	8	0
5.	இதயக் குமுறல் (அரசியல் முற்போக்கு நவீனம்)	(அச்சில்)		

விற்பனைக் கழிவு 20% அனுப்பும் செலவு எங்களுடையது. முன்பணத்துடன் வரும் ஆர்டர்கள் மட்டும்தான் கவனிக்கப்படும்.

விவரங்கட்கு:—

இன்ப வாழ்வுப் பதிப்பகம் (Regd)
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

★ துலாபாரம் ★

தியாகம், எடை போடப்படுகிறது —தேச விடுதலைக்குப் பாடுபட்டோர், தங்கள் 'தொண்டுக்கு 'விலை' கேட்டு வாங்கிக்கொள்கிறார்கள்—ஆனாலும், வெளியில் வெட்கமின்றி, நாவில் நடுக்கமின்றி கூவுகிறார்கள், தேசத்திற்கு நாங்கள் செய்த தியாகம் பாரீர் என்று!

தியாகம் என்றால், தன்னல மறுப்பு என்று கூறுவார்கள்—ஆனால், இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தேசியத் தியாகிகளோ, பட்ட பாட்டிற்கு கூலி கேட்டு, அதற்காக சண்டையிடுகின்றனர்.

"எவ்வளவு பாடுபட்டு, உனக்கு அந்த வேலையை வாங்கித் தந்தேன். என் சொந்த அலுவலைக்கூட பார்க்காமல், ஓடோடியும் உன்னோடு வந்து பார்க்க வேண்டியவர்களை பார்த்து, பல்லிளிக்கவேண்டிய நேரத்தில் பல்லிளித்து, வாங்கித் தந்தேனே—என் தியாகம் எப்படிப் பட்டது?" என்றான் அவன்.

"போய்யா, பெரிய தியாகம் பண்ணிவிட்டாயோ! அடித்து வாங்கிக்கொண்டாயே ஒரு ஓட்டு—தியாகமாம், தியாகம—நூறு ரூபாய் வாங்கிக்கிட்டு வேலை செய்தாய்."—என்று கன்னத்தில் அறைவது போலக் கூறினான், வேலைபெற்றவன்.

தியாகிகளுக்கு, நிலம் வழங்குவதாக முடிவுசெய்ததே தவறு—உலகு ஏற்காத புதுவித ஏற்பாடு! நஞ்சை நிலமானால் ஐந்து, புன்செய் நிலமானால் பத்து ஏகர் என்று பகிரங்கமாகப் பங்கிட்டுக்கொண்டு, தியாகிகள் என்று பேசித் திரிகிறார்கள்!

நாடு சிரிக்குமே—நாம் இப்படிப் பேசினால் என்று நினைக்காமல் 'தியாகக் கதை' கூறுகிறார்கள். தியாகத்தைத் திராசில் போட்டு, சம எடை நிலம் எடுத்துக்கொண்டார்களே, வேலை வாங்கிக் கொடுக்க, நூறு ரூபாய் கைக்கூலி பெற்றதைப் போல! அப்படியிருந்தும் 'வாயடி கையடி' மட்டும் ஓயவில்லை!

ஒரு கட்சி ஆள்கிறபொழுது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, நாட்டின் பொதுசொத்தான நிலத்தைப் பங்கிடுவது, பகிரங்கக் கொள்ளைபோல! ஆனாலும், நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது—நாட்டு மக்கள் சகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தியாகத் திராசில் எடைபோட

21000 பேர் மனுப் போட்டனர்.

9000 பேர் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

4000 பேர் நிராகரிக்கப்பட்டனர்.

இந்த பாரத வீரர்களின் தியாகத் திராசைப் பார்க்கக் கண்கள் கூசும்—காது, செவிடாகும், தியாக ஏலத்தின் ஓலத்தைக் கேட்க சகிக்காமல்!

நிலம் வேண்டி, 21000 தியாகிகள் மனுப் போட்டனராம்—எந்த உரைகல் வைத்து, இவர்களின் தியாகத்தின் 'மாற்றை'க் கண்டுபிடித்தார்களோ, நமக்குத் தெரியாது! ஒரே தள்ளுபடிமயம்—போலிகள் அதிகம் போலும், அவர்களில்—இல்லாவிட்டால், ஏன் : தியாகிகள் அவ்வளவு குறைகிறார்கள்!

எந்த 'ஜல்லடையில்' சலித்து எடுத்தார்களோ, எந்த 'முறத்து முறை' கொண்டு புடைத்து எடுத்தார்களோ, தெரியவில்லை—21000 பேரில, 9000 பேரே கிடைத்தனர், 'அசல்' தியாகிகள்!

4000 பேரோ, தியாகிகள் இல்லையென்றே மறுத்துவிட்டனர்—அவர்கள் 'தியாகம, எந்த இடத்தில் 'ஒட்டையோ' எந்த பாகத்தில் 'சொத்தையோ' — அந்த 'தியாக எக்சாமினருக்கு'த்தான் வெளிச்சம்!

அரசியல் கொடுமைகளுக்கு ஆளாகியிருந்தால்மட்டும் போதாது—அவர்கள் இன்னமும், அந்த தேசியத் திருப்பாதையிலேயே திருநடனம் செய்பவர்களாக இருக்க வேண்டும்—இல்லாவிட்டால், கிடையாது நிலம்! கரைந்திடும் கட்சிக்கு புதுவலிவு தேட, இது ஒரு மார்க்கமாக்கிவிட்டனர்!

ஜமீன் ஒழிப்பால் கிடைக்கும் நிலத்தை இப்படி, இவர்கள் 'தியாக துலாபாரம்' செய்கிறார்கள்—ஆண்டு பலவாய், ஜமீன் கொடுமையால் ஏங்கித் தவித்த ஏழை விவசாயிகள் மீண்டும் வாட, வாட!

தியாகத்தை, திராசில் போடுகிறார்களே! இவர்கள் வேறு, முகத்துக்கு முக்காடின்றி, 'வெளிச்சம் போட்டுக் கொண்டு' வெளியில் திரிகிறார்களே—வேதனை, வேதனை!

'விலை' பெற்ற பிறகு, கொடுத்த 'பொருளை'ப்பற்றி இவர்களுக்கு உரிமை ஏது? அதற்குப்பெயர்தான் தியாகம் என்று எப்படி ஆகும்? பிரதிபலன் கருதாமல் செய்யப்படுகிற காரியமல்லவோ, அந்தப் 'புனிதப்' பெயர் பெறும். இந்த 'அசல்' தியாகிகளோ, 'ஏகருக்கு' ஏழெட்டு, 'சிபார்சுகள்' அழைத்துக்கொண்டு மந்திரிவீட்டுமாடிப்படியில் 'உண்ணாவிரதமும்' 'வீடு திரும்பமறுப்பியக்கமும், செய்து, நிலம் வாங்குகிறார்கள்—அவர்கள் தியாகமே, தியாகம்!

இந்தத் தியாகிகள்தான் நாட்டு நலமே நம்நலம் என்று உலவிடுவோரைக் கேலி செய்கின்றனர்.

கோட்டான் குயிலைப் பழிப்பதைபோல, மந்தி மயிலைக் கேலி செய்வதுபோல்—அவர்கள் தியாகிகளாம், மற்றவர்கள் அந்தத்தியாகம் செய்யவில்லையாம்! திராசிலேதியாகம்—அதுவும், நிலத்திற்காக ஏலம்—அவர்கள்தான் பிறரைக் கேலி செய்கிறார்கள்! வெட்கம்!

"சுடர்"

சிறந்த வார இதழ்

முற்போக்குப் பாதையில் முன்னணி, சமூக சீர்திருத்தம், நிறையக் கருத்துக்கள் உண்மையை உரைப்பதில் விளக்கம் இவ்வித உயர்நோக்குடன் உலவிவரும் பத்திரிகை.

விலை அணா 1.

முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை. விவரங்கட்கு,

(A) A. S. சிங், நாகர்கோவில்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram'